*கவனிக்க.- 30.06.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2027 - 2017 ජූලි මස 07 වැනි සිකුරාදා - 2017.07.07

*2027 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1154 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1155 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, யூலை மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, யூலை மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நீதிச்சேவைகள் ஆணைக்குழு

இலங்கை நீதிச்சேவையில் நிலவும் வெற்றிடங்கள்

இலங்கை நீதிச்சேவையின் II ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்குரிய நீதிவான் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள நபர்கள், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2017.08.08 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 34,335 - 6 X 790 - ரூபா 39,075 (இச்சம்பள அளவானது முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 05/ 2016 இற்கு அமைவாக திருத்தப்படும்.) சம்பளத்திற்கு மேலதிகமாக நீதிமன்ற அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

3. **சகல விண்ணப்பதாரிகளும்-**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) நன்நடத்தையும் தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(இ) இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் சேவை யாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

4. **தகைமைகள் :**

(அ) தொழில் நியாய சபையின் தலைவராக இரண்டு வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) ஐந்து வருடங்களுக்குக் குறையாத காலப்பகுதியில் வினைத்திறன்மிக்க முறையில் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அல்லது ஈடுபட்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும் ; அல்லது

(இ) ஏதேனுமொரு அமைச்சில் அல்லது அரச திணைக்களம் ஒன்றில் அல்லது அரச கூட்டுத் தாபனம் ஒன்றில் சட்ட அதிகாரியாக ஐந்து வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தைக் கொண்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும் ; அல்லது

(ஈ) ஏதேனுமொரு கம்பனியில் அல்லது வங்கியில் அல்லது நிறுவனத்தில் சட்ட அதிகாரியாக ஐந்து வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தைக் கொண்டவராகவும் அக்காலப்பகுதியில் தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் தோன்றிய வழக்கறிஞராகவும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் நடைபெறவிருக்கும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

**குறிப்பு :**

(1) விண்ணப்பப்படிவக் கட்டணமான 3,000 ரூபாவினை மக்கள் வங்கியின் டாம் வீதிக் கிளையில் பேணப்பட்டு வரும் 297100199025039 என்ற இலக்கத்தை உடைய "செயலாளர், நீதிச்சேவைகள் ஆணைக்குழு" எனும் கணக்கில் இடும் வகையில் எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட வைப்புச் சீட்டினை பதிவுத் தபாலினூடாகவோ அல்லது நேரில் அலுவலகத்திற்கு வந்து சமர்ப்பிப்பதன் மூலமாகவோ விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். பணம் செலுத்துவதற்காக வைப்புச் சீட்டினை நிரப்பும்போது வைப்புச்சீட்டின் உரிய இடத்தில் விண்ணப்பதாரியின் பெயர், முகவரி என்பவற்றை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரிகள் பதிவுத் தபாலினூடாகவோ அல்லது அலுவலகத்திற்கு நேரில் சமுகமளித்தோ தமது விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(3) அரச சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் சமர்ப்பிப்பதற்குமான முகவரி :

செயலாளர்,
நீதிச்சேவைகள் ஆணைக்குழு,
நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12.

ஜீ. எம். டபிள்யூ. பி. ஜயதிலக,
பதிற் கடமையாற்றும் செயலாளர்,
நீதிச்சேவைகள் ஆணைக்குழு.

நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2017, யூன் 22.

7-211

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## நிதி அமைச்சு

இலங்கைச் சுங்கம்

சுங்க பிரதான பரிசோதகர்கள் மற்றும் சுங்கப் பரிசோதகர் (தரம் I) ஆகியோர்களுக்கான சுங்க உதவி அத்தியட்சகர் தரம் II பதவிக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017

விண்ணப்பங்களானது பின்வரும் அலுவலர்களிடமிருந்து கோரப்படுகின்றன :

(அ) சுங்க பிரதான பரிசோதகர்கள் ; அல்லது

(ஆ) சுங்கப் பரிசோதகர் தரம் I இல் 02 வருடங்கள் திருப்திகரமான சேவையினைப் பூர்த்திசெய்து பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட சுங்கப் பரிசோதகர் தரம் I ஐச் சேர்ந்தோர்கள்.

இவர்களில் பின்வரும் தகைமைகளைக் கொண்டவர்களைக் கொண்டு சுங்க உதவி அத்தியட்சகர் தரம் II ஆம் பதவியில் தற்போதுள்ள வெற்றிடங்களில் 15% நிரப்பப்படும்.

**தொழில்சார் தகைமைகள் :**

(i) விண்ணப்ப முடிவுத் திகதியன்று முன்னுள்ள 5 வருட காலப்பகுதியில் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் அக்காலப்பகுதியில் சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்திருத்தலும் வேண்டும்.

(ii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்று மதிப்பீட்டு நடைமுறைத் திட்டத்திற்கேற்ப செயலாற்று மதிப்பீட்டு மட்டமானது சராசரி அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

(iii) தொடர்புபட்ட வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பமானது இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கிணங்க ஏ4 அளவிலான தாளின் இரு பக்கத்திலும் தயாரிக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்தில் 1 தொடக்கம் 9 வரையான தலைப்பு இலக்கங்கள் முதல் பக்கத்திலும் மீதியானவை மறுபக்கத்திலும் அமையுமாறு தயாரித்தல் வேண்டும். பரீட்சை அறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணபத்திற்கிணங்க விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரியினால் பூர்திசெய்யப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியினது பொறுப்பாகும் என்பதுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணபத்தின் பிரதியொன்றினை தம்முடன் வைத்துக்கொள்வது பயனுள்ளதுமாகும். சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல மாதிரி விண்ணப்பங்களில் பரீட்சையின் தலைப்பானது ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அவர்களது பணிப்பகத்தின் தலைவர்கள் ஊடாக 2017.08.04 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சுங்கத் திணைக்களத்தின் மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் (மனித வளம்) அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணமாக ரூபா 500 இனை ஏதாவது தபால்/உப தபால் அலுவலகத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13ஆம் இலக்க வருமான தலைப்பின் கீழ் வரவு வைப்பதற்காக செலுத்துதல் வேண்டும். பற்றுச்சீட்டானது விண்ணப்பத்தின் குறித்த இடத்தில் ஒட்டப்படல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரர்கள் பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்மிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாகும். இக்கட்டணமானது எச்சந்தர்ப்பத்திலும் மீள செலுத்தப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணம் தொடர்பில் காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

2. இப்பரீட்சையானது எழுத்துப் பரீட்சை மற்றும் பொது நேர்முகப் பரீட்சை ஆகிய இரு பகுதிகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு பரீட்சைக்குமான புள்ளிகள் மற்றும் ஒதுக்கப்பட்டுள்ள நேரம் வருமாறு :

பகுதி I

| எழுத்துப் பரீட்சை : | புள்ளிகள் |
|---|---|
| சுங்க நடைமுறைகள் (2 மணித்தியாலங்கள்) | 100 |
| எளிய கணிதம் (01 மணித்தியாலம்) | 100 |

பகுதி II

பொது நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது)

(குறித்த இப்பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்கான ஆகக்குறைந்த தகைமைகளைப் பரீட்சார்த்திகள் கொண்டுள்ளனரா என்பதனைப் பரீட்சித்தல்)

3. இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் சகல பரீட்சையினையும் ஒரு மொழியிலேயே தோற்ற வேண்டும் என்பதுடன் அம்மொழியானது அவர்கள் தற்போதுள்ள சேவைக்கு உள்வாங்குவதற்கு தகுதிபெற்றதாகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பரீட்சையின் மொழியினை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேற்றினை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதியானதாகும்.

4. இப்பரீட்சையின் பாடங்களது பாடத்திட்டமானது வருமாறு :

பாடத்திட்டம் : சுங்க நடைமுறைகள்

1. (அ) கடல் மார்க்க/ஆகாய மார்க்கமான சரக்குகளை ஏற்றுதல், இறக்குதல், களஞ்சியப் படுத்துதல் மற்றும் வெளியாக்குதல்.

(ஆ) இறக்குமதி களஞ்சியசாலையொன்றில் பொறுப்பாகவுள்ள உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II அவர்களது கடமைகள்.

(இ) நீலப் புத்தகத்தினைப் பூர்த்திசெய்தல்.

(ஈ) மதுபானக் களஞ்சியசாலையில் பொறுப்பாகவுள்ள உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II அவர்களது கடமைகள்.

2. **ஏற்றுமதி** :

(அ) தரையிறங்குவதற்காகப் பெறப்பட்ட சரக்கு தொடர்பில் பின்பற்றப்படும் நடைமுறை

(ஆ) ஏற்றுமதி விபரங்களை நுண்ணாய்வு செய்தல்

(இ) இருப்புக் கையேட்டினை பேணுதல்

3. **மாற்றி ஏற்றல் சரக்கு** :

(அ) கடல் மார்க்கப் பொருட்கள் தொடர்பிலான பொதியிலடைக்கப்பட்ட சரக்கு (stuffing) மற்றும் பொதியிலடைக்கப்படாத சரக்கு (De-stuffing)

(ஆ) மாற்றி ஏற்றல் பொருட்பட்டியல்களை தயாரித்தல்

(இ) கரையோர கப்பல் சரக்கு

4. பிணைப்படுத்தப்பட்ட களஞ்சியசாலைகளுடன் தொடர்புபட்ட வெளியாக்கல் செயல்முறை

5. **பொது** -

- மீளளிப்புகளை சான்றுபடுத்துதல் தொடர்பிலான மீளளிப்புகள் மற்றும் நிபந்தனைகள்
- தீர்வை மீளளிப்புக்கு வரையறுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்
- மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் தடை செய்யப்பட்ட பொருட்களது அட்டவணை - (நாட்டுக்குள் கொண்டுவரல் மற்றும் நாட்டிலிருந்து கொண்டு செல்லல் தொடர்பிலானவை)
- பிரகடனப்படுத்தாத சரக்குகள், பிழையான பிரகடனம் மற்றும் பொருட்களது பெறுமதியினை குறைத்து மதிப்பிடல் ஆகியவை தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்காக சுங்கக் கட்டளைச் சட்டத்தினால் வழங்கப்படும் அமுல்படுத்தல் அதிகாரங்கள்
- பரிசோதனை செய்தல்/ தேடுதல் மற்றும் தடுப்புக் காவலில் வைத்தல் என்பவை தொடர்பில் சுங்கக் கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள நடைமுறைகள்
- சட்ட ரீதியற்ற முறையில் இறக்குமதி செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் என்பவை தொடர்பில் சுங்கக் கட்டளைச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அலுவலர்களது கடமைகளுடன் தொடர்புபட்ட சகல திணைக்களக் கட்டளைகள்

5. **எளிய எண்கணித/ அடிப்படைக் கணித வினாத் தாளுக்கான பாடத்திட்டம் பின்வருவனவற்றினை கொண்டிருக்கும்**.- இவ்வினாத்தாள் கூட்டல், கழித்தல், பெருக்கல் மற்றும் வகுத்தல் போன்ற எண்கணித செயல்பாடுகளில் பரீட்சார்த்தியின் திறமையினையும் கணித வினாக்களை தீர்க்கும் வேகத்தையும் பரீட்சிக்கும் வகையிலும் மற்றும் பரீட்சார்த்தியின் கணித மற்றும் தர்க்க ரீதியிலான அறிவினைப் பரீட்சிக்கும் வகையிலும் அமையும்.

6.

6.1 ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை பெறுகின்ற (சுங்க நடைமுறைகள் மற்றும் எளிய கணிதம்) அல்லது இரண்டு வினாப்பத்திரங்களிலும் மொத்தமாக 100 புள்ளிகளையோ அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளையோ பெறுகின்ற பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

6.2 **பரீட்சையின் பெறுபேறு**.- மேலே 6.1 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறாக வெற்றிகரமான பரீட்சார்த்திகளது பெயர்களடங்கிய பெறுபேற்றுப் பட்டியல் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு பரீட்சைகள் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைகள் திணைக்களம் பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளதும் பெறுபேற்றினை தபாலிலோ அல்லது www.results.exams.gov.lk எனும் அலுவலக வெப் தளத்தினூடாக வெளியிடும்.

7.

7.1 வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நபர்களினால் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனும் ஊகத்தின் பேரில், விண்ணப்பங்களை

சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்டதும் பரீட்சைத் திணைக்களம் அது தொடர்பாக பத்திரிகை அறிவிப்பொன்றினை வெளியிடும். அவ் அறிவித்தல் வெளியாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அப்போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், விலாசம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பின் வெளிப்பிரதேசத்தில் வசிப்பவராயின், மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் அனுமதி அட்டை அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கம், குறிப்பிட்ட உங்களது கோரிக்கை கடிதமொன்றினை அனுப்புவதன் மூலம் திணைக்களத்தினை தொடர்புகொள்ளவதற்கு மிகவும் பொருத்தமாகவிருக்கும். இதன்போது பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் பதிவுத்தபால் இலக்கம் என்பவற்றுடன் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றினை சமர்ப்பிப்பதன் மூலம் இதனை மேலும் இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.

7.2 ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அவருக்கு பரீட்சை மண்டபத்தில் ஒதுக்கப்பட்டுள்ள குறியீட்டு இலக்கத்திற்கு இணங்க பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல விண்ணப்பதாரியும் பரீட்சை அனுமதி அட்டையில் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளுவதுடன் பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டைகளை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

7.3 கண்காணிப்பாளர்களை திருப்திப்படுத்தும் வகையில் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் அவர்களது அடையாளத்தினை நிரூபிப்பதற்கு வேண்டப்படும். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஏதேனும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்களை பதிவு செய்யும் திணைக் களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. இப்பரீட்சையானது கொழும்பில் மாத்திரம் நடைபெறும். பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் இடம் என்பன உரிய நேரத்தில் அறிவிக்கப்படும்.

9. பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேற்றினை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். இந்த விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறுகின்ற சந்தர்ப்பத்தில், அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டணைகளுக்கு ஆளாக நேரிடும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலில் யாதேனும் வித்தியாசம் காணப்படின் சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே வலுப்பெறும். இந்த ஒழுங்கு விதிகளில் கவனிக்கப்படாத ஏதேனும் விடயம் நிதி அமைச்சுச் செயலாளரின் தற்றுணிவின் படி கையாளப்படும்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம்,<br>
இலங்கைச் சுங்கத் திணைக்களம்.

இலங்கைச் சுங்கத் திணைக்களம்,<br>
"சுங்க இல்லம்"<br>
இல. 401, பிரதான வீதி,<br>
கொழும்பு 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுங்க உதவி அத்தியட்சகர் தரம் II ஆம் பதவிக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017**

LIMITED COMPETITIVE EXAMINATION FOR PROMOTION TO THE POSTS OF ASSISTANT SUPERINTENDENT OF CUSTOMS, CLASS II - 2017

(அலுவலக பாவனைக்கு மாத்திரம்)

நீர் இப்பரீட்சையில் தோற்றுவதற்கான மொழி மூலம் :

சிங்களம் - 2<br>
தமிழ் - 3<br>
ஆங்கிலம் - 4<br>
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

1. விண்ணப்பதாரியின் பெயர் :

1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்கள்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியாக முதலெழுத்துக்களுடனான பெயர் :----.
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. அனுமதி அட்டை அனுப்புவதற்கான விலாசம் :----.

3. தேசிய அடையாள அட்டையினது விபரங்கள் :

3.1 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3.2 திணைக்கள அடையாள அட்டை இலக்கம் :
..............................................................................

4. பால் :
ஆண் - 0
பெண் - 1 ☐
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

5. தற்போதைய பதவியும் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதியும் :----.

6. தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.

7. தற்போதைய பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மொழி :----.

8. தற்போது கடமை புரியும் இடம் :----.

9. கடந்த ஐந்து வருட காலத்துள் உமக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் எதுவும் நடைபெற்றுள்ளதா ?

10. கல்வித் தகைமைகள் :
..............................................................................
..............................................................................
..............................................................................

11. பிற விசேட தகைமைகள் :
..............................................................................
..............................................................................

12. பரீட்சைக் கட்டணம் செலுத்துகை தொடர்பிலான விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால்/ உப தபால் அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கம் :----.
(iii) செலுத்திய பணம் :----.
(iv) செலுத்திய திகதி :----.

| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும் |
|---|

13. விண்ணப்பதாரரின் உறுதியுரை/ சான்றுப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகிறேன். மேலே பந்தி 03 இல் குறிப்பிட்ட மொழியில் தோற்றுவதற்கு நான் தகுதியுடையவனாவேன். மேலும் பரீட்சை நடத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினது சட்ட விதிகளுக்கமைய நான் நடந்து கொள்ளுவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

14. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் (பொருத்தமற்றதை வெட்டி விடவும்) :

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................................................. என்பவர் எனது அலுவலகத்தில்/ பணிப்பகத்தில் கடமைபுரியும் உத்தியோகத்தர் எனவும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் 2017.................... ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

உறுதிப்படுத்துபவரது கையொப்பம் :----.
உறுதிப்படுத்துபவரது பெயர் :----.
பதவி :----.
அலுவலக முத்திரை :----.
திகதி :----.

திணைக்களத் தலைவரினது சான்றுப்படுத்தல் :

15. இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................ என்பவர் எனது அலுவலகத்தில் சுங்க பிரதான பரிசோதகர்/ சுங்க பரிசோதகர் தரம் I எனும் பதவியில் கடமை புரிபவர் என்றும் மேலே பந்தி 01 தொடக்கம் 11 வரையிலான விபரங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் சான்றுபடுத்துகிறேன். மேலும் அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டானது இணைக்கப்பட்டுள்ளது எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியுடையவர் எனவும் சான்றுபடுத்துகிறேன்.

உறுதிப்படுத்துபவரது கையொப்பம் :----.
உறுதிப்படுத்துபவரது பெயர் :----.
பதவி :----.
அலுவலக முத்திரை :----.
திகதி :----.

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழு

*சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு*

### இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப தரத்தின் மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2017

ஆயுர்வேத திணைக்களத்தின் மருத்துவர் வகுதியின் ஆரம்ப தரத்தைச் சேர்ந்த மருத்துவ உத்தியோகத்தர் பதவியில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் பொருட்டு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை 2017.01.01 ஆந் திகதியன்று பூர்த்திசெய்துள்ள தகுதி வாய்ந்தவர்களை தெரிவுசெய்வதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவினது பணிப்பின் பிரகாரம் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரிப்படிவத்துக்கு அமைவாக விண்ணப்பங்களைத் தயாரித்து பின்வரும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேத திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம" என்னும் விலாசத்துக்குப் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப தரத்தின் மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். அத்துடன் ஆட்சேர்ப்பின் பெயரை சிங்கள மொழி விண்ணப்பங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் மொழி விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2017.08.08 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பம் அல்லது அது தொடர்பான ஆவணங்கள் தபாலில் காணாமல் போனது அல்லது தாமதமாகியது எனத் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதமாக்குவதன் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை விண்ணப்பதாரிகளே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1. **ஆட்சேர்ப்பு முறை**.- 2017.01.01 ஆந் திகதியன்று இந்த அறிவித்தலில் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ள இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பின் பின்னர் இற்றைவரை அரசாங்க சேவையில் நியமனம் பெறாத அடுத்து வரும் ஆண்டுகளுக்கான குழுக்களுக்குரிய மருத்துவப் பட்டதாரிகள், அவர்கள் இறுதிப் பட்டப் பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டுகளின் ஒழுங்கு முறையிலும் இறுதிப் பட்டப் பரீட்சையில் பெற்றுள்ள புள்ளிகளின் அடிப்படையிலுமான திறமையின் ஒழுங்கு முறையில் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

2. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கும் கொள்கைத் தீர்மானத்துக்கு நீங்கள் கீழ்ப்படிதல் வேண்டும் ;

(ii) இந்தப் பதவியில் நியமனம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் மூன்று ஆண்டுகள் (3) தகுதிகாண் காலத்துக்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன், ஆரம்ப தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப பதவியுயர்வுகள் மேற்கொள்ளப்படும் ;

(iii) 2014.01.21 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 01/ 2014 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இந்த நியமனங்களைப் பொறுப்பேற்ற திகதி தொடக்கம் ஐந்து ஆண்டுகள் தாண்டுவதற்கு முன்னர், அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு நேரொத்ததாக அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றதாக உறுதிப்படுத்துதல் வேண்டும். அத்துடன் இந்த நியமனத்துக்காக தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை ஆங்கில மொழியிலாயின் தற்றுணிவின் பிரகாரம் அரச கரும மொழியாக சிங்களம் அல்லது தமிழ் என்னும் இரண்டு மொழிகளில் ஒரு மொழியில் தேர்ச்சி நியமனத் திகதியிலிருந்து 3 ஆண்டுகள் அதாவது தகுதிகாண் காலத்திலும் மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சி நியமனத் திகதியிலிருந்து 5 ஆண்டு காலத்துக்குள்ளும் பெற்றுக்கொள்ளல் வேண்டும் ;

(iv) முதல் நியமனத் திகதிக்கு அமைவாக கடமையைப் பொறுப்பேற்ற கடமை நிலையத்தில் மூன்று (03) ஆண்டுகள் தகுதிகாண் காலத்தை நிறைவு செய்யும் வரைக்கும் இந்த நிலையத்தில் சேவையாற்ற வேண்டும் என்பதுடன் குறித்த காலப்பகுதிக்குள் இடமாற்றத்தை எதிர்பார்த்தல் ஆகாது.

(v) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைத் திட்ட விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், 1996 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதியிடப்பட்டதும் 924/ 2 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்கள ரீதியான ஏனைய கட்டளைகளுக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- இந்தப் பதவிக்கு ரூபா 52,955 - 3 X 1,335 - 7 X 1,345 - 2 X 1,630 - 16 X 2,170 - ரூபா 1,04,355 (SL-2-2016) மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். (2016.02.25 ஆந் திகதியிடப்பட்ட 03/ 2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக இதன் II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பளம் வழங்கப்படும்.)

4. **வயதெல்லை**.- 2017.01.01 ஆந் திகதியன்று 45 வயதுக்கு மேல் இருத்தல் கூடாது.

5. **தகைமைகள்**.- கல்வி/ தொழில்சார் தகைமைகள்.- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஆயுர்வேத/ சித்த/ யுனானி மருத்துவவியல் தொடர்பான ஐந்து வருட கற்கைநெறியுடன் ஒரு வருட சேவைக்கால பயிற்சியைப் பூர்த்திசெய்து பெற்றுக்கொண்ட பட்டப்படிப்பின் பின் ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவுசெய்யப்பட்ட மருத்துவர் ஒருவராக இருத்தல்.

5.1 ***உடல் ரீதியான தகைமைகள் :***

(i) சகல பரீட்சார்த்திகளும் இலங்கையில் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும்,

(ii) பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான அளவு உடல் மற்றும் உள ரீதியான தகுதியும் இருத்தல் வேண்டும்.

5.2 ***பிற தகைமைகள் :***

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(iii) 2017.01.01 ஆந் திகதியன்று பதவியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகளை எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

6. **நேர்முகப் பரீட்சை**.- பொதுவான நேர்முகப் பரீட்சை.- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் சுகாதார சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கின்ற நேர்முகப் பரீட்சை சபையின் ஊடாக கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் பரீட்சிக்கப்படும்.

7. **பரீட்சார்த்திகளின் அடையாளங்கள்**.- நேர்முகப் பரீட்சைக்கு சகலவிதத்திலும் பூர்த்திசெய்து விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள பரீட்சார்த்திகள் மாத்திரம் அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகளும் முறையாக உறுதிப்படுத்திய பிரதிகளும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் ஆவணங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ நேர்முகப் பரீட்சை சபை கோருமிடத்து சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரி ஆயத்தமாக இருத்தல் வேண்டும் :

(i) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(ii) பட்டப்படிப்புச் சான்றிதழ் ;
(iii) ஆயுர்வேத மருத்துவ சபையின் பதிவுச்சான்றிதழ் ;
(iv) பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ் ;
(v) தேசிய ஆள் அடையாள அட்டை.

8. சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவம் 22-29 செ. மீ அளவில் A4 தாளில் தயாரிக்க வேண்டும் என்பதுடன், இலக்கம் 1 தொடக்கம் 8 வரையிலான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும், இலக்கம் 9 தொடக்கம் 11 வரையிலான தலைப்புக்கள் இரண்டாவது பக்கத்திலும் உள்ளவாறு தயாரிக்க வேண்டும் எனவும் இதற்கு உரியதான தகவல்கள் தமது கையெழுத்தினால் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்புடையதாகாத விண்ணப்பப்படிவங்கள் அறிவிக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றை கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

9. **போலியான தகவல்களை வழங்குதல்**.- தங்களால் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுகின்ற ஏதேனும் தகவல் பிழையானது அல்லது போலியானது என ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்னர் தெரியவருமிடத்து தங்களது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும்.

இவ்வாறான பிழையான அல்லது போலியான தகவல்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து இதற்குரிய நடவடிக்கைகளுக்கு உட்படுத்தி பணி நீக்கம் செய்யப்படுவர்.

10. வெற்றிடத்தை நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் பொறுப்பாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் கட்டளையின்படி,

பீ. ஜீ. எஸ். குணதிலக,
செயலாளர் (பதில் கடமை),
சுகாதார, போசணை மற்றும்
சுதேச மருத்துவத்துறை அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு,
'சுவசிரிபாய',
இல. 385, சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச ஹிமி மாவத்தை,
கொழும்பு 10,
2017, யூன் 16.

அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம் [ ]

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப தரத்தின் மருத்துவ உத்தியோகத்தர் பதவி**

1. (i) (அ) முதலெழுத்துக்களுடன் இறுதியில் குறிப்பிடும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

(ஆ) முதலெழுத்துக்களுடன் இறுதியில் குறிப்பிடும் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

(ii) (அ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ஆ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. (i) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.
(கடிதங்கள் இந்த முகவரிக்கு அனுப்பப்படும்)

(ii) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

(iii) தொலைபேசி இலக்கங்கள் :----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. (i) பிறந்த திகதி :

ஆண்டு: [ ][ ][ ][ ] மாதம்: [ ][ ] திகதி: [ ][ ]

(ii) 2017.01.01 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள்: [ ][ ] மாதங்கள்: [ ][ ] நாட்கள்: [ ][ ]

4. பால் :

பெண் [ ] ஆண் [ ]

(உரிய கூட்டுக்குள் X என இடுக.)

5. விவாகமானவரா/ விவாகமாகாதவரா என்பது ?

விவாகமானவர் [ ] விவாகமாகாதவர் [ ]

(உரிய கூட்டுக்குள் X என இடுக.)

6. இலங்கைப் பிரசையா ? :----.

7. இனம் :----.

8. நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட-

(i) மாகாண சபை :----.
(ii) மாவட்டம் :----.
(iii) பிரதேச செயலாளர் பிரிவு :----.

9. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

10. கல்வித் தகைமைகள் :
பட்டப்படிப்பு தொடர்பான விபரங்கள் :

பீ.ஏ.எம்.எஸ். (BAMS) [ ] பீ.யூ.எம்.எஸ். (BUMS) [ ] பீ.எஸ்.எம்.எஸ். (BSMS) [ ]

(உரிய கூட்டுக்குள் X என இடுக.)

(1) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.
(2) பட்டச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி :----.
(3) வகுப்பு :----.
(4) பட்டப்படிப்பை பூர்த்திசெய்த மொழி மூலம் :----.
(5) செயல்முறைப் பயிற்சி பெற்ற ஆண்டு :----.

11. ஆயுர்வேத மருத்துவ சபையின் பதிவு பற்றிய விபரங்கள் :

(1) இலக்கம் :----.
(2) ஆண்டு :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கியுள்ள விபரங்கள் உண்மையானதும் சரியானதும் என இத்தால் உறுதிப் படுத்துகின்றேன். நான் ஆயுர்வேத மருத்துவ, மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் இதில் உள்ளடக்கப்பட்ட ஏதும் விபரங்கள் போலியானது அல்லது பிழையானது என நியமன அதிகார பீடத்துக்கு தெரியவருமிடத்து இதன் காரணத்தினால் நான் இந்தப் பதவிக்குத் தகுதியற்றவராவேன் எனவும், எந்தவொரு நட்டஈட்டுத் தொகையையும் செலுத்தாமல் என்னை பணி நீக்கம் செய்வதற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ............................ ........... (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், ................................. ஆந் திகதி அவரின் கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பமும்,
உத்தியோகபூர்வ முத்திரையும்.

திகதி :----.

**விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் ஈடுபடுபவராயின் திணைக்களத் தலைவரின் அறிக்கை :**

மேலே குறிப்பிடப்பட்டட விபரங்கள் சரியானவை எனவும், அவரின் வேலை மற்றும் நடத்தை ................................ எனவும் உறுதிப்படுத்துகின்றேன். தற்பொழுது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/ முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ முத்திரையும்.

திகதி :----.

7-156

---

## மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்

### இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் வகுப்பின் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் வகுப்பின் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து (கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான பதவிகளின் எண்ணிக்கை - 06

| | |
|---|---|
| தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்) | - 05 |
| தொழில்நுட்ப உதவியாளர் (இயந்திரவியல்) | - 01 |

1. **சேவை நிபந்தனைகள்**.- அரச சேவைகள் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகள் மற்றும் இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் வகுப்பின் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் :-

1.1 தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவை செய்யும் நிபந்தனைக்கு உட்பட்டவராவார்.

1.2 நியமனம் மூன்று (3) வருட தகுதிகாண் கடமை நிலைக்கு உட்பட்டதாகும். தற்பொழுது அரச சேவையின் பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட அலுவலர் நியமிக்கப்பட்டால் அவர் ஒரு வருட பரிசீலனைக் கால எல்லையின்கீழ் இருப்பார்.

1.3 நியமனத்தை நிரந்தரமாக்குவதற்கு நியமனத் திகதி முதல் மூன்றாவது வேதன நிலைக்கு வருவதற்கு முன்னர் முதலாவது தடைதாண்டும் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

1.4 பதவியில் அமர்த்தப்பட்ட பின்னர் 5 வருடத்துக்குள் 2007.05.28 ஆந் திகதிய பொது நிர்வாக 07/ 2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைய இரண்டாம் அரச மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

1.5 நியமனம் கிடைத்த அலுவலர் அரச சேவைகள் ஆணைக்குழுவின் நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக் கோவையின் நிபந்தனைகளுக்கும், நிதி ஒழுங்கு பிரமாணங்களுக்கும், காலத்துக்கு காலம் அரசினால் வழங்கப்படும் திருத்தங்களுக்கும் ஏனைய சட்ட முறையான கட்டளைகள், அமைச்சு மற்றும் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகளுக்கும் அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

2. **சம்பளத் தொகுதியும் திட்டமும்**.- பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/ 2016 (IV) இற்கு அமைய சம்பள குறியீட்டு இல. MN-3-2016 ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 ரூபா 57,550 ஆகும்.

(இந்த சம்பளம் தங்களுக்கு 2020.01.01 ஆந் திகதிவரை உரித்துடையாகும். இந்த சுற்றறிக்கையின் அட்டவணை II இன் விதிமுறைக்கு அமைய நியமனம் நடைமுறைப்படுத்தும் திகதி முதல் சம்பளம் வழங்கப்படும்.)

3. **வயதெல்லை** :-

3.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். தற்பொழுது அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.

3.2 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

3.3 நற்பண்புகளையும் சிறந்த தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

4. **கல்வித் தகைமை** :

(அ) சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இன்னும் இரு பாடங்களில் திறமைச் சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதம்/விஞ்ஞானம்/ தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களுக்குரிய மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த)

ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் (பழைய பாடவிதானத்தின்கீழ்) மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல்) ;

(இ) கடமை புரியும் பாடத்துறைக்கு உரியதான அருஞ்செயல் (Excel) மற்றும் Auto CAD பயன்பாடு சம்பந்தமாக மூன்றாந்தர மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாட நெறியை வெற்றிகரமாக நிறைவேற்றி இருப்பது விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.

5. **தொழில் தகைமை**.- தொழில்நுட்ப உதவியாளர் (சிவில் மற்றும் இயந்திரவியல்) :

(i) மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(ii) தேசிய தொழில் பயிலுநர் மற்றும் தொழில்நுட்பவியல் பயிற்சி வழங்கும் அதிகாரசபை (NAITA) மூலம் வழங்கப்பட்ட பொறியியல் தேசிய டிப்ளோமா ;

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப் பட்ட தேசிய உயர் பொறியியல் தேசிய டிப்ளோமா ;

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப் பட்ட தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப் படும் பொறியியல் பரீட்சையில் முதலாவது பகுதியை வெற்றிகரமாக நிறைவுசெய்திருத்தல் ;

அல்லது

(vi) தொழில் துறைக்கு ஏற்றதான தேசிய தொழில் தகைமை (NVQ) 6 ஆவது மட்ட தகைமையை நிறைவுசெய்திருத்தல் ;

அல்லது

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனத்தில் விசாரித்து கருத்துக்கள் பெறப்படும்போது மேற்குறிப் பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல ஒப்பீடாக மூன்றாந்தர மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு வினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகளைக் கொண்டிருத்தல்.

மேற்குறித்த தகைமைகள் யாவும் பதவிக்கு உரிய துறை களாக இருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை**.- அடிப்படைத் தகைமைகளை நிறைவு செய்துள்ள விண்ணப்பதாரர்கள் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படும் பொதுப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

பொதுப் போட்டிப் பரீட்சையில் குறிப்பிடப்படும் சகல வினாத்தாள்களுக்கும் 40% அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு விண்ணப்பதாரியினால் பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தொடர் வரிசைக் கிரமத்தில் சேர்த்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமமாக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் தகைமையுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

7. **பொதுப் போட்டிப் பரீட்சை :**

7.1 இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழி களில் நடாத்தப்படும்.

7.2 விண்ணப்பதாரர்கள் தாம் விரும்பும் ஏதேனும் ஒரு மொழியில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றலாம். அத்துடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் பரீட்சையில் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

7.3 பரீட்சைக் கட்டணம் 500 ரூபாவாகும்.

இந்தப் பணம் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவப் பணிப்பாளரின் பெயருக்கு பெறப்பட்டு மாளிகாவத்தை தபால் அலுவலகத்தில் பணம் மாற்றக்கூடிய வகையில் காசுக் கட்டளை ஒன்று விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். (அதனை ஒட்டுதல் ஆகாது.)

7.4 பாடவிதானம் (வினாப்பத்திரம் இரண்டிலும் சித்தியடைதல் வேண்டும்) :

(1) நுண்ணறிவுப் பரீட்சை (காலம் : 1 மணித்தி யாலம் - மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்)

(2) பொது அறிவுப் பரீட்சை (காலம் : 1 மணித்தி யாலம் - மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்)

7.5 2017, ஒற்றோபர் மாதத்தில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் இப்பரீட்சை நடாத்தப்படும்.

7.6 பாடவிதானம் :

(1) நுண்ணறிவுப் பரீட்சை (காலம் : 1 மணித்தி யாலம் - மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்)

* வாய்மூல, இலக்கத்தில், வரைபடம் அமைப்புக்குள் சமர்ப்பிக்கப்படும் பிரச்சினைகள் சம்பந்தமாக விண் ணப்பதாரரின் தீர்மானத்தில் விண்ணப்ப தாரரின் வரைபடத்தில் தர்க்க ரீதியான தன்மை வரைபடத்தில் பகுப்பாய்வு செய்தல் மற்றும் தீர்மானிக்கும் ஆற்றலின் நுண்ணறிவை அளவீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

(2) பொது அறிவு (காலம் : 1 மணித்தியாலம் - மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்)

* தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்) :

(i) கரையோர வலயத்தை முகாமைத் துவம் செய்தல் :

* கரையோர வலயத்தை எதற்காக முகாமைத்துவம் செய்ய வேண்டும் ?

* அதனை எவ்வாறு முகா மைத்துவம் செய்வது ?

(ii) கடலரிப்பு மற்றும் அதற்கான காரணம்/ இயற்கை காரணம்/ மனித நடவடிக்கையினால் கரை யோர சூழலுக்கு ஏற்ற மர வகைகள்

(iii) கடலரிப்பின் தாக்கத்துக்கு உள்ளாகும் பிரதேசம், வருடாந்த கடலரிப்பு வேகம், துரித கடலரிப்பின் நிலையைக் கட்டுப்படுத்தும் முறை

* தொழில்நுட்ப உதவியாளர் (இயந்திர வியல்) :

(i) வரைதல் முறையைப் பயன் படுத்தி வரைபடத்திற்கு அமைய இயந்திரத்தின் அல்லது உதிரிப் பாகங்களுக்கு ஏற்படும் அல்லது முன்பின் பக்கம் எடுத்துக் காட்டும் வரைவு மற்றும் பௌதிகவியல், இயந்திரவியல் மற்றும் வர்த்தக, கணிதம் ஆகிய பாடங்கள் சம்பந்தமாக விண்ணப்பதாரரின் அறிவைப் பரிசீலனை செய்வ தற்காக இவ்வினாத்தாள் தயாரிக் கப்பட்டுள்ளது.

8. **விண்ணப்பிக்கும் முறை :**

8.1 இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரிப் படிவத்துக்கு அமைய ஏ4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி, முதல் பக்கத்தில் இல. 1 தொடக்கம் 5 வரையும், எஞ்சிய பகுதி அடுத்த பக்கத்தில் வரக்கூடியவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2017, ஒகத்து மாதம் 07 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கும் பொருட்டு ''பணிப்பாளர் நாயகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், 4 ஆவது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளடக்கியிருக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் வகுப்பின் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளல்'' எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

**குறிப்பு**.- அரச சேவையில் உள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பத்தை தத்தமது திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

8.2 குறித்த மாதிரிப்படிவத்துக்கு அமைய சகல விடயங்களையும் முறையாகப் பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் விண்ணப்பம் தபாலில் தொலைந்துவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்பன போன்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

8.3 விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. எனினும் செய்திப் பத்திரிகையின் மூலம் பரீட்சை நடைபெறும் திகதி அறிவிக்கப்படும். விண்ணப்பதாரருக்கு குறித்த பரீட்சை நடைபெறும் 7 தினங்களுக்கு முன்னர் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்காவிடின் கீழ்க்குறிப்பிடப்படும் விபரங்களுடன் உடனடியாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறியத்தரவும் :-

(i) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் ;
(ii) முகவரி ;
(iii) விண்ணப்பம் தபாலில் அனுப்பிய திகதி, பதிவு இலக்கம், தபால் அலுவலகம்.

9. விண்ணப்பதாரரினால் கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங் களின் ஒளிப்படப் (போட்டோ) பிரதிகள் விண்ணப்பப்படிவத் துடன் அனுப்புதல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ் ;
(iii) தொழில் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்.

10. இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்படாத யாதேனும் விடயங்களில் பிரச்சினைகள் ஏற்படின் அது சம்பந்தமாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கே உரியதாகும்.

பி. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,
பணிப்பாளர் நாயகம் (பதில்),
கரையோரம் பேணல் மற்றும் கரையோர
மூலவள முகாமைத்துவ திணைக்களம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர
மூலவள முகாமைத்துவ திணைக்களம்,
மாளிகாவத்தை,
2017, யூன் 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு**

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்

***இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் வகுப்பின் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017***

(அலுவலகப் பாவனைக்கு மட்டும்)

விண்ணப்பிக்கும் பதவி :

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
(குறித்த இலக்கத்தைக் கோட்டுக்குள் குறிக்கவும்)

1. பெயர் :-

1.1 முதல் எழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியதாக பெயர் (ஆங்கிலத்தில் தனி எழுத்தில், உதாரணம் : SILVA, A.B.,), (திரு./ திருமதி/ செல்வி) :----.

1.2 முதல் எழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (தமிழில்) :----.

2. முகவரி :-

2.1 நிரந்தர முகவரி :----.

2.2 உத்தியோக முகவரி :----.

2.3 தொலைபேசி இலக்கம் :

அலுவலகம் :----. சொந்த :----.

3. இலங்கைப் பிரசையா ? :----.

4. 4.1 பிறந்த திகதி :-

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

4.2 தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

5. 5.1 ஆண்/ பெண் (பால்) :

| | |
|---|---|
| ஆண் : | |
| பெண் : | |

5.2 சமூக அந்தஸ்து :

| | |
|---|---|
| விவாகமாகாதவர் | |
| விவாகமானவர் | |
| தாரமிழந்தவர் | |

6. கல்வித் தகைமை :

6.1 க. பொ. த. (சா. த.) :

வருடம் :----. பரீட்சை சுட்டிலக்கம் :----.

| பாடம் | பெற்ற சித்தி | பாடம் | பெற்ற சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

6.2 க. பொ. த. (உ. த.) :

வருடம் :----. பரீட்சை சுட்டிலக்கம் :----.

| பாடம் | பெற்ற சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

7. தொழில்நுட்பத் தகைமைகள் :

| பாடநெறியின் பெயர் | பாடநெறியில் தோற்றிய நிறுவனம் | பாடநெறியின் கால எல்லை | பெற்ற சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

8. அனுபவம் :

| தொழில் அனுபவம் | நிறுவனம் | கால எல்லை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

9. மொழித்திறன் சம்பந்தமான விபரம் :

| மொழி | வாசிப்பு | எழுதுதல் | கதைத்தல் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

10. பரீட்சைக் கட்டணம் அனுப்பிய தபால் அலுவலகத்தின் பெயர் :----.

தபால் கட்டளை இல. :----.

| |
|---|
| அனைத்து பரீட்சைக்கான கட்டணம் 500 ரூபா ஆகும். ஏதேனும் ஒரு தபால் அலுவலகத்தில் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ பணிப்பாளரின் பெயருக்கு செலுத்தப்பட்டு மாளிகாவத்தை தபால் அலுவலகத்தில் பணம் மாற்றக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும். பற்றுச்சீட்டின் மூலம் பிரதியை இதில் இணைத்தல் வேண்டும். (பற்றுச்சீட்டை ஒட்டுதல் ஆகாது.) |

11. இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானதும், சரியானதுமென இத்தால் உறுதி கூறுகிறேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் யாதேனும் பிழையானவை அல்லது பொய்யானவை என நான் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் தெரியவரின் நான் பதவிக்குத் தகுதியற்றவனாகக் கருதப்படுவதற்கும், நியமனத்தின் பின்னராயின் எவ்வித நட்டஈடும் இன்றி பதவி இழக்கச் செய்வதற்கும் ஆளாவேன் என்பதை நான் நன்கு அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

(தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு மட்டும்.)

**திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

திரு./திருமதி/செல்வி ...................................................... எனும் பெயருடைய அலுவலரினால் தரப்பட்டுள்ள விபரங்களை பரிசீலனை செய்து பார்த்தேன், அவ்விபரங்கள் யாவும் சரியானது எனவும், இவர் தெரிவுசெய்யப்படுமிடத்து தற்போது இவர் வகிக்கும் சேவையிலிருந்து விடுவிப்பு செய்ய முடியும்/ முடியாது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
பதவி முத்திரை.

பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

7-217

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

கத்தோலிக்க மறைப் பாடசாலை
இறுதிச் சான்றிதழ் பரீட்சை – 2016

**சட்ட விதிமுறைகள் :**

1. கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் இதற்கென அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.

2. **பரீட்சை நிலையம்.**- நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களிலும் விண்ணப்பதாரரின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். இருப்பினும் குறிப்பிட்ட ஒரு பரீட்சை நிலையத்தில் போதியளவு விண்ணப்பதாரர்கள் இல்லாவிடின் அப்பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, அதற்குரிய விண்ணப்பதாரர்கள் அதற்கு அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்தில் மேற்படி பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் மாவட்டங்கள் மற்றும் நகரங்களடங்கிய பட்டியல் இணைப்பு I இல் தரப்பட்டுள்ளன.

3. **ஊடக மொழி.**- இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் மாத்திரம் நடைபெறும்.

4. **தகுதி.**- இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் கீழ்வருவனவற்றில் ஏதேனும் ஒரு தகைமையைப் பெற்றிருக்க வேண்டும் :-

4.1 மறைப் பாடசாலையொன்றில் பத்தாம் தரத்தில் சித்திபெற்று மறைப் பாடசாலையின் இறுதி சான்றிதழ் பத்திர வகுப்பில் ஒரு வருடம் கல்வி பயின்றிருத்தல் ;

4.2 தேசிய கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் அல்லது கல்வி பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ. க.) பாடத்தில் சித்திபெற்றிருத்தல். அல்லது சிரேட்ட பாடசாலை சான்றுப்பத்திர பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ. க.) பாடத்தில் சித்திபெற்றிருத்தல்.

4.3 அந்தந்த மறை மாவட்டத்தில் நடைபெறும் வருடாந்த மறைக்கல்வி பரீட்சையில் பதினோராந்தர வகுப்பில் சித்திபெற்றிருத்தல்.

**குறிப்பு.**- (i) இப்பரீட்சையில் தோற்றும் விண்ணப்பதாரர்கள் மேலே பந்தி 4 இல் கேட்கப்பட்டுள்ளதற்கேற்ப தகுதி பெற்றுள்ளார் என்பதை மறைக்கல்வி பாடசாலைப் பொறுப் பாசிரியர் அல்லது பங்குக் குருவானவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர் மறைப் பாடசாலை விண்ணப்பதாரராக மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

5. **விண்ணப்பித்தல் :**

5.1 கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்காக பரீட்சைத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அனைத்து மறைப் பாடசாலைகளுக்கும் தேவையான விண்ணப் பப்படிவங்கள், அறிவுறுத்தல் பத்திரங்கள் உரிய காலத்தில் வழங்கப்படும். குறிப்பிட்ட காலத்திற்குள் விண்ணபப்பப்படிவம் கிடைக்காவிட்டால் மறைப் பாடசாலையின் பெயர், முகவரி, விண்ணப்பதாரரின் எண்ணிக்கை ஆகிய விபரங்களை உள்ளடக்கிய கடிதம் மூலம் இவ்வறிவித்தலின் 5 : 6 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு 2017.07.21 ஆந் திகதிக்கு முன் அறிவித்து விண்ணபப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5.2 விண்ணப்பதாரர் தனிப்பட்ட விண்ணப்பதாரராக பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார். ஆயினும், அறிவுறுத்தல் 4 இல் கேட்கப்பட்டுள்ள தகுதியிருப்பின் தமது வதிவிடத்துக்கண்மையிலுள்ள மறைப் பாடசாலையின் ஊடாக பரீட்சைக் கட்டணமாக 200 ரூபாவைச் செலுத்தி பரீட்சைக்குத் தோற்ற விண்ணபிக்கலாம். இதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் சகல மறைப் பாடசாலைகளின் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

5.3 மறைப் பாடசாலைப் பொறுப்பாசிரியரினால் முன்வைக்கப்படும் இவ்விண்ணப்பங்களின் இரண்டு பிரதிகள் தயாரிக்கப்பட்டு முதல் பிரதி பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டுமென்பதுடன் இரண்டாம் பிரதி மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் வசம் வைத்திருத்தல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவம் இரண்டிலும் மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

5.4 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2017.08.08 ஆந் திகதி ஆகும்.

5.5 விண்ணப்பங்கள் தெளிவாகவும், பிழையின்றியும் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படாத விண்ணப்பங்களும், விண்ணப்பங்கள் அனுப்புவ தற்கு நாம் குறிப்பிட்ட கடைசித் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

5.6 மறைப் பாடசாலையின் கணினி இலக்கத்தையும், முகவரியையும் சரியாகக் குறிப்பிடப்பட்டிருப்பதோடு முகவரி மாற்றப்பட்டிருப்பின் அதை எமக்கு அறிவிக்க வேண்டும். தொலைபேசி வசதியிருப்பின் அதன் இலக்கத்தையும் குறிப்பிடுக. நிரப்பப்பட்ட விண்ணபப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப் படமாட்டாது :

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
த. பெ. இல. 1503,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிப் பரீட்சை - 2016" என்பதையும் விண்ணப்பிக்கும் நகரத்தையும் குறிப்பிட வேண்டும். விண்ணப்பத்துடன் வேறெந்த சான்றிதழையும் இணைக்கத் தேவையில்லை.

5.7 விண்ணப்பதாரியின் உரிய சான்றிதழ் பற்றிய தகுதியை, விண்ணப்பதாரியை உறுதி செய்யும் மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் அல்லது பங்குத் தந்தை அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

5.8 பரீட்சைக்கு விண்ணபிக்கும் எல்லா பரீட் சார்த்திகளினதும் விண்ணபப்பப்படிவத்தில் பூரணப் படுத்தியுள்ள தகவல்களை தனிப்பட்ட முறையில் பரீட்சித்துப் பார்த்து ஒப்பமிட வேண்டும்.

5.9 விண்ணப்பதாரிகள் ஒப்பமிடாத, அழிக்கும் வெண்மை பயன்படுத்திய மற்றும் வேறு குறைபாடுகளுடன் கூடிய விண்ணபப்பத்திரங்களும், விண்ணபப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணபப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

6. **பரீட்சைக் கட்டணம்.**- இப்பரீட்சைக்கான கட்டணம் 200 ரூபாவாகும். இருப்பினும், முதன் முதலில் தோற்றும் விண்ணப்பதாரர் இப்பரீட்சைக்கான கட்டணத்தைச் செலுத்த தேவையில்லை. நூன சித்தியைப் பூர்த்திசெய்ய வேண்டிய பாடத்திற்கான கட்டணம் 50 ரூபா ஆகும்.

6.1 ***பரீட்சைக் கட்டணம் செலுத்தல்.***- விண்ணப்பதாரர் அனைவரினதும் பரீட்சைக் கட்டணத்தை பொறுப்பாசிரியர் ஒன்று சேர்த்து இலங்கையில் ஏதாவதொரு தபால் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு, அப்பற்றுச்சீட்டை விண்ணபப்பத்திரத்தின் பின்னால் ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை நீங்களும் வைத்திருப்பது நன்று (முத்திரை, காசுக்கட்டளை போன்றவை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது).

6.2 ***பரீட்சைக் கட்டணம் மீளப்பெறல்.***- எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவோ, மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.

7. **அனுமதிப்பத்திரம்.**- பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால், விண்ணப்பித்த மறைப் பாடசாலை பொறுப்பாசிரியரூடாக அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்.

7.1 இப்பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் தமது அனுமதிப்பத்திரத்தில்

தமது கையொப்பத்தை சான்றுப்படுத்தி பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் தமது அனுமதிப்பத்திரத்தைக் கொடுக்காவிட்டால் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தமக்கு அளிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தை விட்டு வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தால் அவரது பரீட்சார்த்தித் தகவு இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதிப்பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் மறைப் பாடசாலையின் பொறுப்பாசிரியரினால் அல்லது பங்குத் தந்தையினால் அல்லது அரச பாடசாலையொன்றின் அதிபரினால் அல்லது வருடமொன்றிற்கு 2,40,360 ரூபாவை விட கூடிய திரட்டுச் சம்பளத்தைப் பெறும் அரசின் நிரந்தர அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு 7 நாட்களுக்கு முன் அனுமதிப் பத்திரம் கிடைக்காவிடின் அந்த மறைப்பாடசாலை பொறுப்பாசிரியரினூடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் கீழ்க்குறிப்பிட்ட விபரங்களை அறிவிக்க வேண்டும் :-

(1) பரீட்சையின் பெயர் ;

(2) மறைப் பாடசாலையின் பெயர் ;

(3) மறைப் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள கணினி இலக்கம் ;

(4) விண்ணப்பதாரியின் முழுப் பெயரும் முகவரியும் ;

(5) விண்ணப்பித்த பரீட்சை நிலையம்/ நகரம் ;

(6) விண்ணப்பப்பத்திரம் தபாலிடப்பட்ட தபாற்கந்தோர் ;

(7) விண்ணப்பம் பதிவுசெய்யப்பட்ட பதிவு எண்ணும் திகதியும் ;

(8) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருப்பின் அந்தப் பற்றுச்சீட்டு இலக்கம், திகதி, தபால் அலுவலகம்.

8. **ஆள் அடையாளம்**.- ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மண்டப மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் பரீட்சார்த்திகள் தம்மை அடையாளப்படுத்தும் ஆவணத்தைச் சமர்ப்பிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றில் ஒன்றைப் பயன்படுத்தலாம் :-

8.1 தேசிய ஆள் அடையாள அட்டை ;

8.2 செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;

8.3 தபால் ஆள் அடையாள அட்டை.

9. **சித்திபெற்றமையைத் தீர்மானித்தலும், பெறுபேற்றை வெளியிடலும்**.- இத்தேர்வுக்கான வினாத்தாள்களின் எண்ணிக்கை நான்கு ஆகும். பரீட்சையில் சித்திபெறுவதற்கு பரீட்சார்த்தி நான்கு வினாத்தாள்களிலும் சித்திபெற வேண்டும். ஆயினும் இந்நான்கினுள் ஏதேனும் ஒரு பாடத்தில் மாத்திரம் சித்திபெறாவிடின் அது நூன சித்தியாகக் கருதப்படும். பரீட்சைக்குத் தோற்றிய வருடத்திலிருந்து தொடர்ந்து வரும் இரண்டு (02) வருடங்களுக்குள் அந்நூன சித்திபெற்ற பாடத்திற்கு மீண்டும் தோற்றி அதில் சித்திபெற வேண்டும். (இது 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.) நூன சித்தி பெறும் மாணவர்கள் அதனைப் பூர்த்திசெய்யும்போது அப்பாடத்திற்கு மட்டுமே தோற்ற வேண்டும்.

9.1 எல்லாப் பாடங்களின் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 100 புள்ளிகள் வழங்கப்படுவதுடன் சித்தி பெறும் தரங்களுக்குரிய புள்ளி இடைவெளி மற்றும் குறியீடு என்பன கீழே தரப்பட்டுள்ளது :

| புள்ளி ஆயிடை | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0-34 | சித்தியின்மை | F |
| 35-54 | சித்தி | S |
| 55-69 | திறமைச் சித்தி | C |
| 70-100 | விசேட சித்தி | D |

9.2 பரீட்சார்த்திகளின் பெறுபேற்று அட்டவணை அந்தந்த மறைப் பாடசாலைப் பொறுப்பாளருக்கு தபால் மூலம் அனுப்பப்படும்.

10. **சான்றிதழ் பத்திரம்**.- இத்தேர்வில் சித்திபெற்ற அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைத் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

11. **விடைத்தாள் மீள் பரிசீலனை**.- மறைப் பாடசாலை பொறுப்பாசிரியரின் வேண்டுகோளின்படி மாத்திரம் விடைத் தாள்கள் பரிசீலனை செய்யப்படும். இத்திணைக்களத்தினால் வெளியிடப்படும் படிவத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் மீள் பரிசீலனைக்கு விண்ணப்பிக்கலாம். இதற்காக அறவிடப்படும் கட்டணத் தொகை பற்றி அவ்வப்போது மாற்றம் செய்ய இடமுண்டு. அதுபற்றி விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படும். ஏற்கனவே வெளியிடப்பட்ட பெறுபேற்றில் ஏதும் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே இப்பணம் மீளத்தரப்படும். எக்காரணத்தைக் கொண்டும் விண்ணப்பதாரருக்கோ அவரது பிரதிநிதிக்கோ விடைத்தாள்களைப் பரிசீலிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.

12. இச்சட்டதிட்டங்களுக்கும், பாடத்திட்டத்தில் காட்டப் பட்டுள்ள ஒழுங்கு முறைகளுக்கும் ஏற்ப செயற்படுவதற்கு அனைத்து விண்ணப்பதாரரும் கட்டுப்பட்டு இருப்பதோடு இந்த

ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்காதோர் பற்றிய விடயத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் முடிவே இறுதியானதும் ஆகும்.

டபிள்யூ. எம். என். ஜே. புஷ்பகுமார,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
*2017, யூன் 21.*

## கத்தோலிக்க மறை

*(2007 இல் இருந்து நடாத்தப்படும் பரீட்சைக்கான பாடத்திட்டம்)*

*இத்தேர்வு ஒவ்வொரு வினாத்தாள்களும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட 4 வினாத்தாள்களை உள்ளடக்கியது.*

### *வினாத்தாள் I*

கத்தோலிக்க விசுவாசம்

(அ) இவ்வினாத்தாள் திருத்தூதரது விசுவாச அறிக்கையின் ஆரம்ப கற்பித்தலை அடித்தளமாகக் கொண்டுள்ளது :

* படைத்தவர்
  - உலக ஆரம்பம்
  - படைப்பின் அழகு
  - படைப்பைப் பாதுகாத்தல் (தொ. நூ. 1, 2, 3)
* மீட்பர்
  - இயேசுக்கிறிஸ்து (யோவான் 1 : 1-14)
  - இறையரசு பற்றிய படிப்பினை (மத்தேயு 5, 6, 7)
  - உவமைகள் (மத்தேயு 13 : 1-52)
  - புதுமைகள் (யோவான் 11 : 38-45, லூக்கா 8 : 26-39, மாற்கு 2 : 1-12 மற்றும் 4 : 35-41)
* தூய ஆவியானவர்
  - செயற்பாடுகள் (யோவான் 7 : 37-39, 14 : 15-31, 16 : 5-15, 1 கொருந்தியர் 12 : 4-11)
* கத்தோலிக்க திருச்சபை
  - ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்
  - திருச்சபை கிறிஸ்துவின் சரீரமாக
    * உரோமையர் 12 : 4-21
    * 1 கொரிந்தியர் 12 : 12-31
  - திருச்சபையின் ஆட்சித்திட்டம்
  - அங்கீகரிக்கப்பட்ட அதிகாரம்கொண்ட பணி
  - துறவற பணி
  - பொதுநிலையினர் பணி
* மனித வாழ்வின் மாற்றம்
  - மனிதனின் இறுதி நிகழ்வு
  - புதிய வானமும் புதிய பூமியும் (திருவெளிப்பாடு 21 : 1-4)

### *வினாத்தாள் II*

கத்தோலிக்க வாழ்வுக்கான வழி

(ஆ) கத்தோலிக்க வாழ்வுக்கு வலிமை தரும் திருவழிபாடு

* திருப்பலியும் திருப்பலிச் சடங்கும்
* பாஸ்கா மறைபொருள்
* இறையருள்
* திருவருட்சாதனங்கள் (பொதுவான பண்பு)

  * தொடக்க திருவருட் சாதனங்கள் :
  * திருமுழுக்கு
  * உறுதிப்பூசுதல்
  * திவ்விய நற்கருணை

  * சுகத்தை வழங்கும் திருவருட்சாதனங்கள் :
    * ஒப்புரவு
    * நோயிற்பூசுதல்

  * பணிக்காக ஏற்படுத்தப்பட்ட திருவருட் சாதனங்கள் :
    * குருத்துவம்
    * மெய்விவாகம்

### *வினாத்தாள் III*

கத்தோலிக்க நல்லொழுக்க வாழ்வு

(இ) கத்தோலிக்க நல்லொழுக்கம்

* பத்துக் கட்டளைகளும் அன்பின் கட்டளைகளும் - இரு பக்கங்கள்
* பத்துக் கட்டளைகளை நிறைவாக்கிய இயேசுக்கிறிஸ்து (மத்தேயு 5 : 21-47)

* சமவெளிப் பொழிவு (மலைப்பொழிவு) (லூக்கா 6 : 17-49)
* அறிவு, சுதந்திரமான விருப்பு, உணர்வுகள்
* இறை உறவின் பண்புகள்
* மனச்சாட்சி
* இறைவனை அன்பு செய்தல் (1-3 கட்டளைகள்)
* அயலவரை அன்பு செய்தல் (4-10 கட்டளைகள்)
* பத்துக் கட்டளைகளில் தோன்றவேண்டிய நற்பழக்கங்கள்
* கத்தோலிக்க தனித்துவ அடையாளம்

***வினாத்தாள் IV***

செப வாழ்வு

(ஈ) இறையுறவை வளர்க்கும் செபம்

* பழைய ஏற்பாட்டில் செபம்
  * ஆபிரகாம்
  * மோசே

* புதிய ஏற்பாட்டில் செபம்
  * கிறிஸ்து செபித்த விசேட சந்தர்ப்பங்கள்
  * செபம் தொடர்பான விசேட படிப்பினைகள் (லூக்கா 11 : 1-13)

* திருச்சபை வாழ்வில் செபம்
  * புகழ்தல்
  * நன்றி கூறல்
  * வேண்டுதல்
  * பரிந்துரை செபங்கள்
  * தியானத்தின் மூலம் செபித்தல்

* கிறிஸ்து கற்பித்த செபத்தில் (பரலோக மந்திரம்) வேண்டுதல்கள் ஏழு
  * உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக
  * உம்முடைய அரசு வருக
  * உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூவுலகிலும் செய்யப்படுவதாக
  * எங்கள் அனுதின உணவை எங்களுக்கு அன்றாடம் அளித்தருளும்
  * எங்களுக்குத் தீமை செய்கின்றவர்களை நாங்கள் பொறுப்பதுபோல் எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்
  * சோதனையில் எங்களை விழ விடாதேயும்
  * தீமையில் இருந்து எங்களை இரட்சித்தருளும்

* பல்வித பக்தி முயற்சிகள்
  * செபமாலை
  * நவநாட்கள்
  * திருமணித்தியாலம்

பயன்படுத்தக்கூடிய நூல்கள்

- புதிய கத்தோலிக்க திருமறை
- பெரிய குறிப்படம்
- திருவிவிலியம் (குறிப்பிட்ட பகுதிகள்)
- இரண்டாம் வத்திக்கான் சங்க,
  * திருவழிபாடு
  * இன்றைய உலகில் திருச்சபை
  * கிறிஸ்துவின் திருச்சபை
  * பொதுநிலையினரின் திருப்பணி

*அட்டவணை - 1*

மாவட்டங்களில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள நகரங்களும் நகர எண்களும்

**மாவட்டம் 01 - கொழும்பு**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| பொரளை | 101 |
| களுஅக்கலை | 102 |
| பன்னிப்பிட்டி | 103 |
| மொறட்டுவை | 104 |

**மாவட்டம் 02 - கம்பஹா**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| நீர்கொழும்பு | 205 |
| கந்தானை | 206 |
| கம்பஹா | 207 |
| றாகம | 208 |

**மாவட்டம் 03 - களுத்துறை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| களுத்துறை | 309 |

**மாவட்டம் 04 - காலி**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| காலி | 410 |

**மாவட்டம் 05 - மாத்தறை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மாத்தறை | 511 |

**மாவட்டம் 06 - அம்பாந்தோட்டை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| அம்பாந்தோட்டை | 612 |

**மாவட்டம் 07 - இரத்தினபுரி**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| இரத்தினபுரி | 713 |

**மாவட்டம் 08 - கேகாலை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கேகாலை | 814 |

**மாவட்டம் 09 - புத்தளம்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| புத்தளம் | 915 |
| சிலாபம் | 916 |
| வென்னப்புவ | 917 |

**மாவட்டம் 10 - குருநாகல்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| குருநாகல் | 1018 |
| குளியாப்பிட்டி | 1019 |
| நிக்கவரட்டி | 1020 |

**மாவட்டம் 11 - கண்டி**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கண்டி | 1121 |

**மாவட்டம் 12 - மாத்தளை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மாத்தளை | 1222 |

**மாவட்டம் 13 - நுவரெலியா**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| தலவாக்கலை | 1323 |

**மாவட்டம் 14 - பதுளை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| பதுளை | 1424 |

**மாவட்டம் 15 - மொணறாகலை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மொணறாகலை | 1525 |

**மாவட்டம் 16 - அநுராதபுரம்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| அநுராதபுரம் | 1626 |

**மாவட்டம் 17 - பொலன்னறுவை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| ஹிங்குராக்கொடை | 1727 |

**மாவட்டம் 18 - திருகோணமலை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| திருகோணமலை | 1828 |

**மாவட்டம் 19 - மட்டக்களப்பு**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மட்டக்களப்பு | 1929 |

**மாவட்டம் 20 - அம்பாறை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| அம்பாறை | 2030 |
| கல்முனை | 2031 |

**மாவட்டம் 21 - யாழ்ப்பாணம்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2132 |
| மானிப்பாய் | 2133 |
| பருத்தித்துறை | 2134 |
| நெடுந்தீவு | 2135 |

**மாவட்டம் 22 - முல்லைத்தீவு**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கிளிநொச்சி | 2236 |
| முல்லைத்தீவு | 2237 |
| முழங்காவில் | 2238 |

**மாவட்டம் 23 - மன்னார்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மன்னார் | 2339 |
| முருங்கன் | 2340 |
| ஆண்டாங்குளம் | 2341 |
| பெரிய பண்டிவிரிச்சான் | 2342 |

**மாவட்டம் 24 - வவுனியா**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| வவுனியா | 2443 |

திருத்தம்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

நொத்தாரிசு ஆரம்பப் பரீட்சை – 2016/2017

2017, மே 12 ஆந் திகதிய 2019 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II(அ) இன்கீழ் பிரசுரிக்கப்பட்ட நொத்தாரிசு ஆரம்பப் பரீட்சை – 2016/2017 இன்கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில்–

5.1 ஆம் பிரிவில் “பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2017.06.12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாகக் கிடைக்கக்கூடியதாக” எனக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி, “பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2017.08.08 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக” என திருத்தியமைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தில் 5.1 ஆம் பந்தியில் “2017.06.12 ஆந் திகதியில் வயது” எனக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி “2017.08.08 ஆந் திகதியில் வயது” என திருத்தியமைக்கப்பட வேண்டும்.

ஏற்கனவே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

நீல் டி அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
பத்தரமுல்லை,
2017, யூன் 27.

7-344

---

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2016 / 2017

நாடு பூராவும் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களில் இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த சிவில், பொறிமுறை, புகையிரத திணைக்களத்தின் மின் (கனதி) மற்றும் மின் (இலகு) பொறியியல் ஆகிய வகுதிகளைச் சேர்ந்த பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான மட்டுப்படுத்த போட்டிப் பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவைக்குரிய பொறியியல் உதவியாளரொருவராக (முன்னாள் தொழில்நுட்ப உதவியாளர்) அல்லது புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ பதவி வகிக்கும் அலுவலரொருவராக அல்லது ஏனைய அரசாங்க சேவையின்/மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிகின்ற இலங்கை தொழில்நுட்ப சேவைக்குரிய நியமன அதிகாரியினால் அங்கீகாரமளிக்கப்பட்ட தகைமை பெற்ற தொழில்நுட்ப அலுவலர்களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு திணைக்களத் தலைவர் ஊடாக, பொறியியல் சேவைப் பணிப்பாளர், அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில், “இலங்கை பொறியியலாளர் சேவையின் பதவிகள் தொடர்பான ஆட்சேர்ப்பு (மட்டுப்படுத்தப்பட்ட) – 2016/ 2017” எனத் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கோரப்படும் இறுதித் திகதி 2017.08.04 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப் படிவம் அல்லது அது தொடர்பான ஆவணம் தபாலில் காணாமற் போனமை அல்லது தாமதம் குறித்துச் செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்

படிவத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு பரீட்சார்த்திகளே பொறுப்பேற்க வேண்டும். அவ்வாறே நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்வதானது, நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமையாக கருதப்படலாகாது.

மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் இலங்கை பொறியியலாளர் சேவைக்கு அலுவலர்களை ஆட்சேர்ப்பதன் மூலம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த பதவிகளின் எண்ணிக்கை 58 ஆவதுடன், அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகுதிகளின் கீழ் வகுக்கப்படுகின்றன.

| வகுதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சிவில் வகுதி 01 | 12 |
| சிவில் வகுதி 03 (நீர்ப்பாசன) | 17 |
| சிவில் வகுதி 03 (நீர்ப்பாசனமல்லாத) | 02 |
| சிவில் வகுதி 04 | 01 |
| சிவில் வகுதி 05 | 01 |
| சிவில் வகுதி 06 | 06 |
| சிவில் வகுதி 07 | 13 |
| பொறிமுறை வகுதி 01 | 04 |
| மின் வகுதி 01 | 01 |
| மின் வகுதி 03 | 01 |

1. **ஆட்சேர்ப்பு முறை :**

1.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட புள்ளி வழங்கும் நடைமுறைகளுக்கு அமைய நேர்முகப் பரீட்சை சபையின் மூலம் சேவைமூப்பு மற்றும் திறன் என்பன தொடர்பாக வழங்கப்படும் புள்ளிகளை அடிப்படையாக கொண்டு தேர்ந்தெடுக்கப்படும்.

1.2 மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் கீழ் நியமனக் கடிதம் ஒன்றின் மூலம் இ.பொ.சே. III ஆந் தரத்திற்கு அலுவலர்கள் ஆட்சேர்க்கப்படும் போது, அவர்களது சேவை வகுதிகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1836/6 மற்றும் 2013.11.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தீர்மானிக்கப்படும்.

1.3 நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி மற்றும் நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கையினர் பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் தீர்மானிக்கப்படும். நிலவுகின்ற வெற்றிடங்களின் சிறு தொகையினரை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரமுண்டு.

2. **சேவை நிபந்தனைகள் :**

2.1 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1836/6 மற்றும் 2013.11.11. ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரச சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நியமங்களுக்கும், நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதும், எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும், அரச சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், கீழ்ப்பட்டு தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

2.2 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தாங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அத்துடன் அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

2.3 இப்பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் ஓராண்டு (01) பதில் கடமையாற்றும் கால எல்லைக்கு உட்படுதல் வேண்டும்.

2.4 எனினும், மூன்றாண்டுகளுள் (03) முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

2.5 இப்பதவியைப் பொறுப்பேற்ற திகதியில் இருந்து ஐந்தாண்டுகளைத் (05) தாண்ட முன்னர் அரசாங்க கொள்கைகளுக்கு இணங்க அரசகரும மொழித் தேர்ச்சியை பெற்றுக் கொண்டமை பற்றி தாங்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். தாங்கள் இப் பதவி தொடர்பாக தகைமை பெற்றுக் கொண்டது சிங்கள மொழியூடாக எனில், தங்களது மற்றைய அரசகரும மொழி தமிழ் மொழி ஆகும். அவ்வாறே தாங்கள் பதவி தொடர்பாக தகைமை பெற்றுக் கொண்டது தமிழ் மொழியில் எனில், உங்களது மற்றைய அரசகரும மொழி சிங்கள மொழி ஆகும். 2014.01.21 ஆந் திகதி அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/ 2014 இன் ஏற்பாடுகள் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கை ஏற்பாடுகளும் இதனுள் உள்ளடங்குகின்றன.

2.6 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை விதிகளுக்கும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் பிற கட்டளைகளுக்கும் இப் பதவி உட்பட்டதாகும்.

2.7 நியமனம் பெற்றவர்கள், இந்நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

2.8 நியமனம் பெற்றவர்கள், அரசாங்க சேவையைப் போன்றே மாகாண அரசாங்க சேவையிலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டவர்களாவர்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/ 2016 ஐக் கொண்ட சம்பள சுற்றறிக்கைக்கு அமையவும், SL – 1 - 2016 சம்பள வகுதிக்கமையவும், இப்பதவிக்கு ரூபா 47,615 – 10 x 1,335 – 8 x 1,630 – 17 x 2170 – ரூபா 1,10,895 ஆன மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்துடையதாகும். ( தங்களுக்கு சம்பளம் வழங்கப்படுவது 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 03/ 2016 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆகும்.)

4. **தகைமைகள்**.- வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று, விண்ணப்பித்த வகுதிக்கமைய பின்வரும் அடிப்படைத் தகைமைகளுள் ஏதேனுமொரு தகைமையைப் பெற்றிருக்க வேண்டியுள்ளதுடன், இங்கு 4.2 பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளையும், நியமங்களையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.1 ***அடிப்படைத் தகைமைகள் :***

4.1.1 நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையைச் சேர்ந்த அலுவலரொருவராக 15 ஆண்டுகளை விடக் குறையாத சேவைக் காலத்துடன், அதில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகள் 1 ஆம் தரத்திற்கு பதவியுயர்வு பெற்று சேவையாற்றியிருத்தல் மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் சிரேஷ்ட தொழில்நுட்ப பரீட்சையில் முழுமையாக சித்தியெய்தியிருத்தல்.

4.1.2 புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ பதவியொன்றில் பணிபுரியும் அலுவலரொருவர், புகையிரத திணைக்களத்தில் 15 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக் காலத்துடன், அதில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகள் அச் சேவையில் 1 ஆம் தரத்திற்கு பதவியுயர்வு பெற்று பணியாற்றிருத்தல் வேண்டும்.

4.1.3 இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலரொருவராக 15 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக் காலத்துடன், அதில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகள் அச் சேவையில் 1 ஆம் தரத்திற்குப் பதவியுயர்வு பெற்று பணியாற்றியிருத்தல் மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் அரசாங்க தொழில்நுட்ப அலுவலர்கள் தொடர்பான மூன்றாவது பரீட்சையில் (1979 சேவைப் பிரமாணக் குறிப்பு) முழுமையாக சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

4.1.4 இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலரொருவராக 21 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக் காலத்துடன் அச் சேவையில் விசேட தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டிருத்தல்

மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் அரசாங்க தொழில்நுட்ப அலுவலர்கள் தொடர்பான இரண்டாவது பரீட்சையில் (1979 சேவைப் பிரமாணக் குறிப்பு) முழுமையாக சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

4.1.5 (அ) இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலரொருவராக 15 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக் காலத்துடன் அச் சேவையின் 1 ஆம் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டிருத்தல் வேண்டும்.

மற்றும்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து, அவ் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு செய்யப்படும் பாடவிதானத்தின் கீழ் 04 ஆண்டுகால முழுநேர பொறியியல் விஞ்ஞானமானி பாடநெறியை திறம்பட பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ஆ) 4.1.5 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப் பாடநெறிக்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை மற்றும் ஏனைய அனைத்து தேவைகளையும் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பாட விதானத்தின் கீழ் பூர்த்தி செய்து, அதற்குரிய செல்லுபடியாகும் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

4.1.6 இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலரொருவராக 21 ஆண்டுகளுக்குக் குறையாத (1 ஆம் தரத்தில் 05 ஆண்டு சேவைக் காலம் உள்ளடங்கலாக) சேவைக் காலத்துடன் அச்சேவையில் விசேட தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டிருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட தேசிய தொழில்நுட்பவியல் டிப்போளா பரீட்சையில் (NDT) முழுமையாக சித்தியெய்தியிருத்தல்.

4.2 ***நிபந்தனைகள் மற்றும் கட்டளைகள் :***

4.2.1 விண்ணப்பங்கள் அனுப்பப்படும் சந்தர்ப்பத்தில், அலுவலர் அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில், பணியாற்றுபவராக இருத்தல் வேண்டும்.

4.2.2 அலுவலர் விண்ணப்பத்தை அனுப்பும் சந்தர்ப்பத்தில் பணியாற்றும் நிறுவகத்தின் இலங்கை பொறியியலாளர் சேவைக்குரிய வகுதி, இலங்கை பொறியியலாளர் சேவைக்கு ஆட்சேர்க்கும்போது ஏற்புடையதாக கொள்ளும் வகுதியாக கருதப்படும்.

4.2.3 அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்ற இந்நியமனம் அமுல்படுத்தப்படும் திகதியளவில் எந்தவொரு அலுவலரும் அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் இருந்து ஓய்வுபெற நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும்.

4.2.4 இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதிக்கு தகைமைகளைப் பூர்த்திசெய்யவேண்டிய கிட்டிய 5 வருட காலத்துள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

4.2.5 நீர்ப்பாசனத் திணைக்களத்தில், வெற்றிடமாவுள்ள இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரம் பதவி தொடர்பாக விண்ணப்பிக்கும் போது அத்திணைக்களத்தில் பொறியியல் உதவியாளராக தொடர்ச்சியான சேவையில் ஈடுபட்டிருப்பது அவசியமாகும்.

4.2.6 புகையிரத திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த பதவிகள் தொடர்பாக விண்ணப்பிக்கும் போது அத்திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ பதவியொன்றை வகிக்கும் அலுவலராக தொடர்ச்சியான சேவையில் ஈடுபட்டிருப்பது இன்றியமையாததாகும்.

5. **தேகாரோக்கியம்.**- எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரியதான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லாவிதத்திலும் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

6. **பிற தகைமைகள் :**

6.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில், அச் சேவையில் உடன் முன்னரான 05 ஆண்டுகால திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6.2 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியளவில், பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனைத்து தகைமைகளையும் நிபந்தனைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7. புள்ளி வழங்கும் நடைமுறை (நேர்முகப் பரீட்சையில் வழங்கப்படுகின்ற மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை 100 ஆகும்.)

| தொடர் இல. | விடயம் |
|---|---|
| 01 | **சேவைக்கால அனுபவம் (உச்ச புள்ளிகள் 60)**<br><br>தகைமையுடைய, கனதியிடப்பட்ட சேவைக்கால அனுபவம் கூடிய விண்ணப்பதாரிக்கு 60 புள்ளிகள் வழங்கப்பட்டு, ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு அவர்களது கனதியிடப்பட்ட சேவைக்கால அனுபவத்திற்கு விகிதசமமாக குறைந்து செல்லும் வகையில் புள்ளிகள் வழங்கப்படும். சேவைக்கான அனுபவம் தொடர்பாக புள்ளி வழங்கும்போது அடிப்படை தகைமகளை பூர்த்தி செய்த திகதியில் இருந்து விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி வரை சேவைக்காலம் அடிப்படையாகக் கொள்ளப்படும். (கனதியிடப்பட்ட சேவைக்கால அனுபவம் = வகுப்பு 1 இலிருந்து முனைப்புடனான சேவைக்காலம் + (விசேட வகுப்பின் முனைப்புடனான சேவைக்காலம் x 1.25) |
| 02 | **தொழில்நுட்ப அறிவு (உச்ச புள்ளிகள் 20)**<br><br>நேர்முகப் பரீட்சை சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள சிவில், பொறிமுறை மற்றும் மின் பொறியியல் துறைகளில் விசேட அறிவார்ந்த அலுவலர்களினால் நடாத்தப்படும் வாய்மூல பரீட்சையில், குறித்த துறைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளின் பிரயோக மற்றும் கோட்பாடு ரீதியான அறிவினை ஆராய்ந்து, பிரயோக ரீதியான அறிவு தொடர்பாக 10 புள்ளிகளும், கோட்பாடு ரீதியான அறிவு தொடர்பாக 10 புள்ளிகளுமாக உச்சளவில் 20 புள்ளிகள் வழங்கப்படும். |
| 03 | **கல்வி மற்றும் பிற தகைமைகள் (உச்ச புள்ளிகள் 10)**<br>கணினி அறிவு (உச்ச புள்ளிகள் 05)<br><br>ஆறு (06) மாத காலத்திற்குக் குறையாத பாடநெறிக் காலத்துடன் அரசாங்கத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்போளா பாடநெறியை திறம்பட பூர்த்தி செய்திருப்பின் 05 உச்ச புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>மூன்று (03) மாத காலத்திற்குக் குறையாத பாடநெறி காலத்துடன் அரசாங்கத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பாடநெறியை திறம்பட பூர்த்தி செய்திருப்பின் 03 உச்ச புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>(ஒரு தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். ஒரு அலுவலர் 02 சான்றிதழ் பாடநெறிகளை அல்லது அதற்கு கூடியவைகளை சமர்ப்பித்திருப்பின் உயர் தகைமையுடன் கூடிய ஒரு சான்றிதழ் பாடநெறிக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) |
| | **ஆங்கில மொழித் தேர்ச்சி (உச்ச புள்ளிகள் 05)**<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிடமிருந்து அல்லது அரசாங்கத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமா பாடநெறி ஒன்றை திறம்பட பூர்த்தி செய்திருப்பின் 05 உச்ச புள்ளிகள் வழங்கப்படும். |

| தொடர் இல. | விடயம் |
|---|---|
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிடமிருந்து அல்லது அரசாங்கத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் பாடநெறி ஒன்றை திறம்பட பூர்த்தி செய்திருப்பின் 03 உச்ச புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>(ஒரு தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். ஒரு அலுவலர் 02 சான்றிதழ் பாடநெறிகளை அல்லது அதற்கு கூடியவைகளை சமர்ப்பித்திருப்பின் உயர் தகைமையுடன் கூடிய ஒரு சான்றிதழ் பாடநெறிக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) |
| 04 | **சேவைக்கால அறிக்கை (உச்ச புள்ளிகள் 05)**<br><br>(a) செயலாற்றம் (உச்ச புள்ளிகள் 03)<br>உடன் முன்னரான 03 ஆண்டுகால செயலாற்றம் தொடர்பாக புள்ளிகள் வழங்கப்படும்.<br>"மிக நன்று" என குறிப்பிடப்பட்டிருப்பின் ஓராண்டுக்கு - 01 புள்ளி<br>"நன்று" என குறிப்பிடப்பட்டிருப்பின் ஓராண்டுக்கு - 0.5 புள்ளி<br><br>(b) பாராட்டு (உச்ச புள்ளிகள் 02)<br>விண்ணப்பதாரி பெற்றுள்ள பாராட்டுக்கள் தொடர்பாக 01 புள்ளி வீதம் 02 உச்ச புள்ளிகள் வழங்கப்படும். ( பொது 230 மாதிரிப் படிவத்தின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும். தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்ட திகதிக்கு முன்னர் பெற்ற பாராட்டு தொடர்பாக மாத்திரம் புள்ளி வழங்கப்படும்). |
| 05 | **நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறன்கள் (உச்ச புள்ளிகள் 05)** |

8. **ஆளடையாளம்**.- பின்வரும் ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

* ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
* செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

9. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை விதிகள், காலத்துக்குக் காலம் அரசாங்க சேவை சம்பந்தமாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் நிறைவேற்றுத் தர சேவை வகுதியின் III ஆம் தரத்திற்கு உரியதான சேவைப் பிரமாண குறிப்பு மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களிலுள்ள நிபந்தனைகள் ஆகியன இப்பதவிக்கு ஏற்புடையனவாகும்.

10. இங்கு ஏற்பாடுகள் செய்திராத விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரமுண்டு.

11. இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் விளம்பரத்தில் ஏதேனும் ஒரு மொழியில் முன்பின்னான முரண்பாடுகள் ஏற்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான விளம்பரமே வலுவானதாகவிருக்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2017, யூன் 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு அலுவலர்களை (மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்த்தல் - 2016 (2017)**

1. அலுவலரின் முழுப் பெயர் :----.
2. அலுவலரின் பெயர் முதலெழுத்துக்களுடன் :----.
3. தற்போது பணிபுரியும் அலுவலகம் (அமைச்சு/ திணைக்களம்/ மாகாண சபை/ உள்ளூராட்சி நிறுவகம்) :----.
4. பொறியியல் துறை (சிவில்/ பொறிமுறை/ மின் (கனதி மற்றும் இலகு)) :----.
5. அலுவலக முகவரி :----.
6. தனிப்பட்ட முகவரி :----.
7. தொலைபேசி இல. :

   நிலையான : செல்லிடப்பேசி :
8. (a) பிறந்த திகதி :----.

   (b) தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----.
9. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று வயது :

   வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.
10. விண்ணப்பிக்கும் வகுதி :

    (ஒரு அலுவலர் ஒரு வகுதிக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.)
11. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியல் உதவியாளர் சேவையின் அலுவலர் /புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் அலுவலர் /இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (முன்னர் ந.ம.தொ. சேவை) ஆக அரசாங்க சேவையில் இணைந்த திகதி :----.
12. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியல் உதவியாளர் சேவையின் அலுவலர் /புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் அலுவலர் /இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (முன்னர் ந.ம.தொ. சேவை) ஆக அரசாங்க சேவையில் நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.
13. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியல் உதவியாளர் சேவையின் அலுவலர் /புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் அலுவலர் /இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (முன்னர் ந.ம.தொ. சேவை) ஆக அரசாங்க சேவையில் இணைக்கப்பட்ட அலுவலகம் (அமைச்சு /திணைக்களம் /மாகாண சபை /உள்ளூராட்சி நிறுவகம்) :----.
14. தற்போதைய சேவை :----.
15. தற்போதைய வகுப்பு /தரம் :----.
16. ஒவ்வொரு வகுப்பு / தரத்திற்கு நியமனம் பெற்ற / பதவியுயர்வு பெற்ற/ உள்ளீர்க்கப்பட்ட திகதியுடன் பணிபுரிந்த காலஎல்லை வரிசைப்படி முறையே (சம்பளமற்ற விடுமுறை எடுத்திருப்பின் அது பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும்) :

| சேவையின் பெயர் | வகுப்பு /தரம் | காலஎல்லை | *சேவைக்காலம் |
|---|---|---|---|
| | | திகதியில் இருந்து திகதி வரை | வருடம் மாதம் திகதி |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

* விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியளவில் குறித்த ஆவணங்கள் உண்மையான பிரதிகள் என உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்படல் வேண்டும்.

17. இல. 1836 மற்றும் 2013.11.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.3.1.2. பிரிவுக்கமைய ஆகக் குறைந்த தகுதி பெற்றுள்ளமை பற்றி (குறித்த நிரலில் X குறியீட்டை இடுக. பெறுபேற்று ஆவணங்கள் உண்மையான பிரதிகள் என உறுதிப்படுத்தப்பட்டு இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.)

(i) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவைக்குரிய அலுவலராக 15 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக் காலத்துடன், அதில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகள் I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டு பணியாற்றியிருத்தல் மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படும் சிரேஷ்ட தொழில்நுட்பவியலாளர் பரீட்சையில் முழுமையாக சித்தியெய்தியிருத்தல். ☐

சிரேஷ்ட தொழில்நுட்பவியலாளர் பரீட்சை திருப்திகரமாக பூரணப்படுத்தப்பட்ட திகதி :----.

(ii) புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ பதவியொன்றை வகுக்கும் அலுவலராக அத் திணைக்களத்தில் 15 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக் காலத்துடன், அதில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகள் 1 ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டு பணியாற்றியிருத்தல். ☐

(iii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலராக 15 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக் காலத்துடன், அதில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகள் I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டு பணியாற்றியிருத்தல் மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படும் அரசாங்க தொழில்நுட்பவியலாளர் தொடர்பான மூன்றாவது பரீட்சையில் (1979 பிரமாணக் குறிப்பு) முழுமையாக சித்தியெய்தியிருத்தல்.

| பரீட்சை (1979 பிரமாணக் குறிப்பு) | துறை (சிவில்/ பொறிமுறை) | தகைமை திருப்திகரமாக பூரணப்படுத்தப்பட்ட திகதி** |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சை | | |
| 2 ஆம் பரீட்சை | | |
| 3 ஆம் பரீட்சை | | |

**(இணைப்பு 02 அல்லது 03)**

(iv) இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலராக 21 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக் காலத்துடன், அச்சேவையின் விசேட தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டிருத்தல் மற்றும் அச்சேவையின் I ஆம் தரத்தில் 05 ஆண்டுகள் பணியாற்றியிருத்தல் மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படும் அரசாங்க தொழில்நுட்பவியலாளர் தொடர்பான இரண்டாவது பரீட்சையில் (1979 பிரமாணக் குறிப்பு) முழுமையாக சித்தியெய்தியிருத்தல்.

| பரீட்சை (1979 பிரமாணக் குறிப்பு) | துறை (சிவில்/ பொறிமுறை) | தகைமை திருப்திகரமாக பூரணப்படுத்தப்பட்ட திகதி** |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சை | | |
| 2 ஆம் பரீட்சை | | |

**(இணைப்பு 02 அல்லது 03)**

(v) (அ) இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலராக 15 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக் காலத்துடன், அச்சேவையின் விசேட தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டிருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து, அவ் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு செய்யப்படும் பாடவிதானத்தின் கீழ் 04 ஆண்டுகால முழுநேர பொறியியல் விஞ்ஞானமாணி பாடநெறியை திறம்பட பூர்த்தி செய்திருத்தல்.

(ஆ) V இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப் பாடநெறிக்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை மற்றும் ஏனைய அனைத்து தேவைகளையும் ஆட்சேர்ப்பு

செய்யப்படும் பாடவிதானத்தின் கீழ் பூர்த்தி செய்து, அதற்குரிய செல்லுபடியாகும் சான்றிதழைப் பெற்றிருத்தல். (குறித்த சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.) ☐

(vi) இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலரொருவராக 21 ஆண்டுகளுக்குக் குறையாத (I ஆம் தரத்தில் 05 ஆண்டு சேவைக் காலம் உள்ளடங்கலாக) சேவைக் காலத்துடன் அச்சேவையில் விசேட தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டிருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா பரீட்சையில் (NDT) முழுமையாக சித்தியெய்தியிருத்தல். (குறித்த சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.)

18. விண்ணப்பதாரியின் திருப்திகரமான சேவைக்காலம் : ☐

(i) உங்களது சேவைக் காலத்தினுள் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருப்பின் குற்றத்தின் தன்மை, வழங்கப்பட்ட தண்டனை மற்றும் தண்டனை விதிக்கப்பட்ட திகதி என்பனவற்றைக் குறிப்பிடுக : ----.

(ii) கடந்த ஐந்து (5) வருடங்களில் சம்பள ஆண்டேற்றங்களை ஈட்டியுள்ளீர்களா என்பது பற்றி :----.

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். என்னால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் உண்மைக்குப் புறம்பானவையெனவோ, பிழையானவையெனவோ நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னர் தெரியவரும் பட்சத்தில், நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் நட்டஈடு இன்றி நியமனம் இரத்துச் செய்யப்படும் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் உறுதியுரை :**

தற்போது இத் திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியல் உதவியாளர் சேவையின் அலுவலர் / புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் அலுவலர் / இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (முன்னர் ந.ம.தொ. சேவையின்) திரு./ திருமதி/ செல்வி .................................... என்பவரை இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிப்பதற்கு தகைமை பெற்றுள்ளதுடன், அவ் அலுவலரினால் சமர்ப்பிக்கப்பட்ட இவ் விண்ணப்பப்படிவத்தை உசிதமான நடவடிக்கையின் பொருட்டு சமர்ப்பிக்கின்றேன். மேலும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டுள்ளது/எடுக்கப்படவில்லை எனவும், எதிர்காலத்தில் அவ்வாறான எதுவித நடவடிக்கையும் எடுப்பதற்கான காரணிகள் முன்வைக்கப்பட்டுள்ளன/முன்வைக்கப்படவில்லை எனவும் உறுதியுரைக்கின்றேன். (தேவையற்ற சொற்களை நீக்கிவிடவும்)

----,
கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை
(செயலாளர்/ பிரதம செயலாளர்/ திணைக்களத் தலைவர்).

திகதி :----.

**இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்**

சிரேஷ்ட தொழில்நுட்பப் பரீட்சை

பெயர் :..................................................................................................

பிரயோக பரீட்சை

| பாடம் | | புள்ளிகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆண்டு .................. | ஆண்டு .................. | ஆண்டு .................. | ஆண்டு .................. |
| I ஆம் பாதி | | | | | |
| வகுதி I | மட்ட அளவையியல் (பிரயோக பரீட்சை) (>50%) | | | | |
| வகுதி II | நில அளவையியல் (பிரயோக பரீட்சை) (>50%) | | | | |

எழுத்துமூலப் பரீட்சை

| பாடம் | | புள்ளிகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆண்டு .................. | ஆண்டு .................. | ஆண்டு .................. | ஆண்டு .................. |
| I ஆம் பாதி | | | | | |
| வகுதி III | (அ) கட்டமைப்பு கோட்பாடு (கட்டமைப்பு, பொருட்களின் வலிமைக் கோட்பாடு) | | | | |
| | (ஆ) நீரியல் | | | | |
| வகுதி II | நில அளவையியல் ( பிரயோக பரீட்சை) (>50%) | | | | |
| II ஆம் பாதி | | | | | |
| வகுதி I | (அ) வடிவமைப்பு, வரைதல் மற்றும் நியம விபரக்குறிப்பு | | | | |
| | (ஆ) நீர்ப்பாசனம் | | | | |
| வகுதி II | (அ) கணிய அளவையியல் | | | | |
| | (ஆ) தாபனவிதிக் கோவை, நிதிப் பிரமாணம் மற்றும் திணைக்கள ஏற்பாடுகள் | | | | |

எழுத்துமூலப் பரீட்சையின் ஆகக் குறைந்த புள்ளிகளின் மட்டம் 40% ஆகும்.
எழுத்துமூலப் பரீட்சைகளின் மொத்தப் புள்ளிகளின் சராசரி (>50%)

**குறிப்பு** : I ஆம் பாதியின் வகுதி I மற்றும் வகுதி II இல் சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் அந்த ஒவ்வொரு பகுதியிலும் ஆகக் குறைந்தது 50% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அடுத்த எந்தவொரு வகுதியிலும் இருந்து ஒவ்வொரு பாடம் சம்பந்தமாகவும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொண்டு அப்பாடத்தில் சித்தியெய்த இயலுமான போதிலும், பரீட்சையில் சித்தியடைவதற்கு எல்லா எழுத்துமூலப் பரீட்சைத் தாள்களிலும் 50% இற்குக் குறையாத சராசரி புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

*நான்கு தடவைகளுக்கு மேற்படாத வகையில்* எல்லா வகுதிகளிலும் மேலே குறிப்பிடப்பட்டவாறு சித்தியடைந்து, சிரேஷ்ட தொழில்நுட்ப பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

*திகதி* :----.

**அரசாங்க சேவை தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பரீட்சை (சிவில்/ பொறிமுறை)**
**1979 பிரமாணக் குறிப்பு - இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்**

பெயர் :.....................................................................................................
*1 ஆம் பரீட்சை (சிவில்)*
*கட்டாய பாடங்கள்*

| *பாடம்* | *பாட எண்* | *புள்ளிகள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ |
| எழுத்துமூலப் பரீட்சை | | | | | | | |
| பிரயோக அளவையியல் | | | | | | | |
| பிரயோக மட்ட அளவை யியல் | | | | | | | |
| அளவையியல் மற்றும் மட்ட அளவையியல் (கீழ் பரீட்சைத்தாள்) | *03* | | | | | | |

*பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளி* ........................

*(அளவையியல் மற்றும் மட்ட அளவையியல் பாடத்தில் திறமைச்சித்தி தீர்மானிக்கும்போது*, மேலே குறிப்பிடப்பட்டுள்ள *03 பகுதிகளின் எல்லா பகுதிகள் தொடர்பாகவும் ஆகக் குறைந்தது 35% புள்ளிகளைப் பெற வேண்டியதுடன்*, பரீட்சையில் *சித்தியடைவதற்கு எல்லா 03 பகுதிகளிலும் 40% இற்குக் குறையாத சராசரி புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.)*

| *பாடம்* | *பாட எண்* | *புள்ளிகள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ |
| கணிதம் (கீழ் பரீட்சைத் தாள்) | *01* | | | | | | |
| கணிய அளவையியல் (கீழ் பரீட்சைத்தாள்) | *02* | | | | | | |
| வடிவமைப்பு, வரைதல் மற்றும் வரைதிறன் | *04* | | | | | | |

*விருப்பத்தெரிவு பாடங்கள்* – கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுள் 02 பாடங்களில் சித்தியடைதல் வேண்டும் :-

| *பாடம்* | *பாட எண்* | *புள்ளிகள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ |
| அடிப்படை கட்டிட நிர்மாணிப்பு மற்றும் பேணல் | *05* | | | | | | |
| நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு | *06* | | | | | | |
| வேலைத்தள கட்டுப்பாடு | *07* | | | | | | |
| வீதிகள் அமைத்தல் மற்றும் பேணல் | *08* | | | | | | |

*பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளி* ........................

*(முழுப் பரீட்சையிலும் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள* வேண்டியுள்ளதுடன், அனைத்துப் பாடங்களிலும் பெறும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் *சராசரி 45%* ஆக இருத்தல் வேண்டும்)

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

*திகதி* :----.

*2 ஆம் பரீட்சை (சிவில்)*
*கட்டாய பாடங்கள்*

| *பாடம்* | *பாட எண்* | *புள்ளிகள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ |
| எழுத்துமூலப் பரீட்சை | | | | | | | |
| பிரயோக அளவையியல் | | | | | | | |
| பிரயோக மட்ட அளவையியல் | | | | | | | |
| அளவையியல் மற்றும் மட்ட அளவையியல் | 23 | | | | | | |

பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளி ........................

(அளவையியல் மற்றும் மட்ட அளவையியல் பாடத்தில் திறமைச்சித்தி தீர்மானிக்கும்போது, மேலே குறிப்பிடப்பட்டுள்ள 03 பகுதிகளின் எல்லா பகுதிகள் தொடர்பாகவும் ஆகக் குறைந்தது 35% புள்ளிகளைப் பெற வேண்டியதுடன், பரீட்சையில் சித்தியடைவதற்கு எல்லா 03 பகுதிகளிலும் 40% இற்குக் குறையாத சராசரி புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.)

| *பாடம்* | *பாட எண்* | *புள்ளிகள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ |
| கணிதம் (கீழ் பரீட்சைத்தாள்) | 21 | | | | | | |
| கணிய அளவையியல் (கீழ் பரீட்சைத்தாள்) | 22 | | | | | | |
| வரைதல் | 24 | | | | | | |

*விருப்பத் தெரிவுப் பாடங்கள்* - கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுள் 03 பாடங்களில் சித்தியடைதல் வேண்டும் :

| *பாடம்* | *பாட எண்* | *புள்ளிகள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ |
| கட்டிட நிர்மாணிப்பு (கீழ் பரீட்சைத்தாள்) | 25 | | | | | | |
| நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு | 26 | | | | | | |
| வீதிகள் அமைத்தல் மற்றும் பேணல் | 27 | | | | | | |
| பாலம் மற்றும் பாரிய கட்டமைப்பு நிர்மாணிப் புக்கள் மற்றும் பேணல் | 28 | | | | | | |
| வேலை ஒழுங்கமைப்பு | 29 | | | | | | |

பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளி ........................

(முழுப் பரீட்சையிலும் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதுடன், அனைத்துப் பாடங்களிலும் பெறும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் சராசரி 45% ஆக இருத்தல் வேண்டும்)

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

*3 ஆம் பரீட்சை (சிவில்)*
*கட்டாய பாடங்கள்*

| *பாடம்* | *பாட எண்* | *புள்ளிகள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ |
| எழுத்துமூலப் பரீட்சை | | | | | | | |
| பிரயோக அளவையியல் | | | | | | | |
| பிரயோக மட்ட அளவையியல் | | | | | | | |
| அளவையியல் மற்றும் மட்ட அளவையியல் | *48* | | | | | | |

*பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளி ........................*

*(அளவையியல் மற்றும் மட்ட அளவையியல் பாடத்தில் திறமைச்சித்தி தீர்மானிக்கும் போது, மேலே குறிப்பிடப்பட்டுள்ள 03 பகுதிகளின் எல்லா பகுதிகள் தொடர்பாகவும் ஆகக் குறைந்தது 35% புள்ளிகளைப் பெற வேண்டியதுடன், பரீட்சையில் சித்தியடைவதற்கு எல்லா 03 பகுதிகளிலும் 40% இற்குக் குறையாத சராசரி புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.)*

| *பாடம்* | *பாட எண்* | *புள்ளிகள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ | *ஆண்டு* ................ |
| *சிவில் பொறியியல் I* | *41* | | | | | | |
| *சிவில் பொறியியல் III* | *44* | | | | | | |
| *சிவில் பொறியியல் IV* | *45* | | | | | | |
| *கட்டிட கணிய அளவை யியல் மற்றும் கட்டிட மதிப்பீடு* | *46* | | | | | | |
| *கட்டடக்கலை வரைதல்* | *47* | | | | | | |

*விருப்பத் தெரிவு பாடங்கள் - கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுள் 01 பாடத்தில் சித்தியடைதல் வேண்டும் :-*

| *பாடம்* | *பாட எண்* | *புள்ளிகள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... |
| கட்டிட நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்பு | 05 | | | | | | |
| நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு | 06 | | | | | | |

பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளி .......................

(முழுப் பரீட்சையிலும் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதுடன், அனைத்துப் பாடங்களிலும் பெறும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் சராசரி 45% ஆக இருத்தல் வேண்டும்)

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**அரசாங்க சேவை தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பரீட்சை (சிவில் / பொறிமுறை)**
**1979 பிரமாணக் குறிப்பு - இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்**

பெயர் :....................................................................................................
1 ஆம் பரீட்சை (பொறிமுறை)
அனைத்து பாடங்களும் கட்டாய பாடங்களாகும்.

| *பாடம்* | *பாட எண்* | *புள்ளிகள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... |
| கணிதம் (கீழ் பரீட்சைத் தாள்) | 01 | | | | | | |
| பொறிமுறை கணிய அளவையியல் | 09 | | | | | | |
| பொறிமுறை வரைதல் மற்றும் வரைதிறன் | 10 | | | | | | |
| வேலைத்தள பயிற்சி | 11 | | | | | | |
| பிரயோக வேலை (பொருத்துதல், தச்சு) ஆகியன | 12 | | | | | | |
| அளவையியல் மற்றும் மட்ட அளவையியல் (பிரயோக) | 13 | | | | | | |

பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளி ........................

(முழுப் பரீட்சையிலும் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதுடன், அனைத்துப் பாடங்களிலும் பெறும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் சராசரி 45% ஆக இருத்தல் வேண்டும்)

*2 ஆம் பரீட்சை (பொறிமுறை)*
*அனைத்து பாடங்களும் கட்டாய பாடங்களாகும்.*

| *பாடம்* | *பாட எண்* | *புள்ளிகள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்டு ...............* | *ஆண்டு ...............* | *ஆண்டு ...............* | *ஆண்டு ...............* | *ஆண்டு ...............* | *ஆண்டு ...............* |
| கணிதம் (கீழ் பரீட்சைத் தாள்) | 21 | | | | | | |
| பொறிமுறை கணிய அளவையியல் (உயர் பரீட்சைத்தாள்) | 30 | | | | | | |
| பொறிமுறை வரைதல் மற்றும் வரைதிறன் (உயர் பரீட்சைத்தாள்) | 31 | | | | | | |
| வேலைத்தள பயிற்சி | 32 | | | | | | |

பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளி ........................

(முழுப் பரீட்சையிலும் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதுடன், அனைத்துப் பாடங்களிலும் பெறும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் சராசரி 45% ஆக இருத்தல் வேண்டும்)

*3ஆம் பரீட்சை (பொறிமுறை)*
*அனைத்து பாடங்களும் கட்டாய பாடங்களாகும்.*

| *பாடம்* | *பாட எண்* | *புள்ளிகள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்டு ...............* | *ஆண்டு ...............* | *ஆண்டு ...............* | *ஆண்டு ...............* | *ஆண்டு ...............* | *ஆண்டு ...............* |
| சிவில் பொறியியல் I | 49 | | | | | | |
| சிவில் பொறியியல் II | 50 | | | | | | |
| சிவில் பொறியியல் III | 51 | | | | | | |
| பொறியியல் பொருளாதாரம் | 52 | | | | | | |
| பொறிமுறைப் பொறி யியல் வரைதல் | 53 | | | | | | |

பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளி ........................

(முழுப் பரீட்சையிலும் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதுடன், அனைத்துப் பாடங்களிலும் பெறும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் சராசரி 45% ஆக இருத்தல் வேண்டும்)

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7-374

**உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்

**குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் வெளிக்கள/அலுவலக முறைப்பட்ட - தொகுதி 2 சேவை வகுதியைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு, கீழ்க் காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இவ் அறிவித்தலில் "திணைக்களத் தலைவர்" எனும் பதம் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் எனப் பொருள்படும். இத் திறந்த போட்டிப் பரீட்சை மூலம், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், வேறு விதத்தில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டில்லாத சந்தர்ப்பங்களில் "பதவி" எனும் பதம் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II எனப் பொருள்படும்.

2. இப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி 2017, யூலை 28 ஆகும்.

2.1 ***எழுத்து மூலப் பரீட்சை.***- இப் பரீட்சை கீழ்க் காட்டப்பட்டவாறு மூன்று (03) வினாத் தாள்களைக் கொண்டதாகும்.

(1) கிரகித்தலும், பொது அறிவும்.
(2) ஆங்கில மொழி.
(3) கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு.

2.2 ***பரீட்சைத் திகதி.***- இப்பரீட்சை 2017 ஓகத்து மாதம் 27 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும். இப் பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் திணைக்களத் தலைவருக்கு உண்டு.

2.3 ***நேர்முகப் பரீட்சை :***

(i) நிலவும் வெற்றிடங்களுள் 10% வீதம் மட்டும் பெண் விண்ணப்பதாரிகளுக்காக ஒதுக்கப்படும்.

(ii) திணைக்களத் தலைவரினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையினால், எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றி, ஒவ்வொரு வினாத் தாளுக்கும் ஆகக் குறைந்தது 40% வீத புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளுள் இருந்து, நிலவும் வெற்றிடங்களைப் போன்று இரு மடங்காக இருக்குமாறு, மேலே (i) இல் காட்டப்பட்ட அடிப்படைக்கு அமைவாக "ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள்" நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். (இந் நேர்முகப் பரீட்சை தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக மட்டுமே நடாத்தப்படும்).

(iii) நேர்முகப் பரீட்சையின் போது கீழே பந்தி 6.3 இன் கீழ் காட்டப்பட்டுள்ள உடல், உளத் தகைமைகளும் பரீட்சிக்கப்படும்.

3. இப்பதவிக்கு நியமிக்கப்படுகின்ற பதவிகளின் எண்ணிக்கை முப்பத்தியிரண்டு (32) ஆகும். இறுதியாக நிலவும் வெற்றிடத்திற்கு அல்லது வெற்றிடங்களுக்கு, சமமான புள்ளிகளைப் பெற்று, நிலவும் வெற்றிடங்களையும் தாண்டி விண்ணப்பதாரிகள் இருக்கின்ற சந்தர்ப்பத்தில், அவ் வெற்றிடத்தை/வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் திணைக்களத் தலைவரினால் இறுதி முடிவு எடுக்கப்படும் என்பதுடன், இவ் ஆட்சேர்ப்புகளில் நியமனம் அமுலுக்கு வரும் திகதியும் திணைக்களத் தலைவரினாலேயே தீர்மானிக்கப்படும்.

4. **சேவை நிபந்தனைகள் :**

4.1 அரசாங்க சேவை நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக் கோவை ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், 2009.02.20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழு நடவடிக்கைமுறை விதிகளுக்கும், 2013.12.20 ஆம் திகதியுடையதாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் வெளிக்கள/ அலுவலக முறைப்பட்ட - தொகுதி 2 சேவை வகுதியைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையிலுள்ள நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும், அவ் ஆட்சேர்ப்பு நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு, தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு நியமிக்கப்படுவர்.

4.2 இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். புதிய நியமனதாரிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எடுக்கப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களுக்கு நியமனதாரிகள் கட்டுப்படுதல் வேண்டும்.

4.3 இந் நியமனம் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்குக் கட்டுப்பட்டதாகும். அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு நியமிக்கப்பட்டு மூன்று (03) வருட காலப்பகுதிக்குள், ஆட்சேர்ப்பு நடைமுறையில் காட்டப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

4.4 01/2014 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையினதும், அதனுடன் இணைந்த சுற்றறிக்கைகளினதும் பிரகாரம், சேவையில் இணைந்து 05 வருட காலப்பகுதிக்குள் உரிய மட்டத்திற்குரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

5. **இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய 3/ 2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு அமைய இப் பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :

ரூ. 34,605 - 10 x 660 - 11 x 755 - 15x930 - ரூ. 63,460 (MN-5/ 2016). அச்சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, அதில் அட்டவணை II இற்கு அமையவே சம்பளம் செலுத்தப்படும். இதற்கு மேலதிகமாக அரச உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படுகின்ற பிற கொடுப்பனவுகளும் இவ் உத்தியோகத்தர்களுக்கும் உரித்தாகும்.

6. **தகைமைகள்** :

6.1 (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
(iii) தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், இப்பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.2 ***கல்வித் தகைமைகள் :***

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் "பட்டம் அளிப்பதற்கான நிறுவனமொன்றாக" அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் அளிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

(ii) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

**குறிப்பு** :பட்டம் பெற்ற திகதியும், க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு திறமைச் சித்தி பெற்றுக் கொண்ட திகதியும், தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய கடைசித் திகதியான 2017 யூலை 28 அல்லது அதற்கு முந்திய திகதியாக இருத்தல் வேண்டும்.

6.3 ***உடற் தகைமைகள் :***

(i) விண்ணப்பதாரிகளின் உயரம் ஆகக் குறைந்தது 5 அடி 4 அங்குலம் (162.5 செ.மீ.) ஆகவும், மார்புச் சுற்றளவு 32 அங்குலம் (81.25 செ.மீ.) ஆகவும் இருத்தல் வேண்டும்.

(ii) பெண் விண்ணப்பதாரிகளின் உயரம் ஆகக் குறைந்தது 5 அடி 2 அங்குலம் (156 செ.மீ.) ஆக இருத்தல் வேண்டும்.

6.4 ***வயதெல்லை.***- விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாமலும், 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதற்கமைய, 1996.07.28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னரும், 1982.07.28 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னரும் பிறந்த விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் இப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

7. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் ரூபா அறுநூறு (ரூ. 600/-) ஆகும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற கடைசித் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 எனும் வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்கும் வகையில், தீவின் எந்தவொரு தபால்/ உபதபால் அலுவலகத்திலும் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தலாம். இப் பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக வேறு எந்தவொரு கட்டணமும் அறவிடப்பட மாட்டாது. பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூண்டில் ஒட்டுதல் வேண்டும். எக் காரணம் கொண்டும் இப் பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது பிறிதொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது. பரீட்சைக் கட்டணம் சார்பில் காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. (பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்).

8. **விண்ணப்பிக்கும் முறை :**

8.1 இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக, 8 1/2"x12" அளவிலான கடதாசியின் (A4) இரு பக்கங்களையும் பாவித்து, இல. 1.0 தொடக்கம் 2.8 வரை முதலாம் பக்கத்திலும், இல. 2.9 தொடக்கம் 7.0 வரை இரண்டாம் பக்கத்திலும், எஞ்சிய பகுதிகள் மூன்றாம் பக்கத்திலும் இருக்குமாறு தமது விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பப்படிவங்களை தமது கையெழுத்தில் அல்லது கணினியில்/தட்டச்சு இயந்திரத்தில் தட்டச்சு செய்து தயாரித்துக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவம் பரீட்சார்த்தியின் கையெழுத்தினால் நிரப்பப்பட்டிருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும், பூரணமற்ற விதத்தில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் எந்தவொரு அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதா? என்பதை பரீட்சித்துப் பார்ப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்).

8.2 விண்ணப்பங்கள் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8.3 சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2017 யூலை 28 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு,

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த.பெ. இல. 1503,
கொழும்பு.

என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படுகின்ற கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017" என தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களைத் தயாரிக்கும் போது, இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய, அதன் தலைப்பை, சிங்கள மொழிமூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழிமூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுவது கட்டாயமாகும்.

8.4 விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பகிரங்க நொத்தாரிசு/ முப்படையைச் சேர்ந்த அதிகார ஆணை பெற்ற உத்தியோகத்தர்/ பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூ. 2,40,360 (6/2006 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் மாதாந்த சம்பளம் ரூ. 41,580) அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெறும் அரசாங்கத்தில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஆகியோருள் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

*8.5 எல்லா விதத்திலும் பரிபூரணமாக இல்லாத விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் காணாமல் போகும் அல்லது பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*

*8.6 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில், எல்லா விதத்திலும் பரிபூரணமான விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அதனை அறிவிக்கும் வகையில், பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகையில் அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு இரண்டு (02) அல்லது மூன்று (03) நாட்கள் கடந்ததன் பின்பும் தமக்குரிய அனுமதி அட்டைகள் கிடைக்காவிட்டால், அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அதனை அறிவித்தல் வேண்டும். இவ்வாறு அறிவிக்கும் போது, விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி ஆகிய விபரங்களை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பிடத்தைக் கொண்டவராக இருப்பின், தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு வசதியாக, மேற்சொன்ன விபரங்களுடன் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு, தமது கோரிக்கைக் கடிதத்தை குறித்த பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்தினூடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதன் மூலம் விசாரிப்பது சாலச் சிறந்ததாக அமையும். மேலும், பரீட்சைகள் திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற ஏதேனும் விபரமொன்றை உறுதிப்படுத்தும் வகையில், விண்ணப்பதாரி ஏற்கனவே தம் வசம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற் பிரதி, விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு ஆகியவற்றைத் தயார் நிலையில் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.*

*9.* **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

*9.1 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு மட்டும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும். பரீட்சைத் தினத்தன்று பரீட்சை அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.*

*9.2 பரீட்சார்த்திகள், தமக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையை, குறித்த பரீட்சை மண்டபத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் முதலாவது நாளிலேயே கையளித்தல் வேண்டும். பொதுவாக பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும், அறிவுறுத்தல்களும் இவ் வர்த்தமானியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச் சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்குக் கட்டுப்படுவதற்கு பரீட்சார்த்திகளுக்கு நேரிடும்.*

**குறிப்பு** :*பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையொன்றை விநியோகிப்பதானது, அப் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கும், பதவியொன்றை வகிப்பதற்கும் தேவையான எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதாக கருதப்பட மாட்டாது.*

*10.* **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம் :**

*10.1 பரீட்சார்த்தியானவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும்.*

*10.2 இதற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதேனும் ஒன்று மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.*

(i) *ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை.*
(ii) *செல்லுபடியான கடவுச்சீட்டு.*

*11.* **பொய்யான தகவல்களை வழங்குதல்.**- விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக கவனம் செலுத்தி மிகச் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கு அமைய எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத் தெரிய வரும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ ஆகிய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப் பரீட்சார்த்தியின் அபேட்சகத்துவம் இரத்துச் செய்யப்படலாம்.

*12.* இவ் அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பில் திணைக்களத் தலைவரினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

*13.* **பரீட்சையை நடாத்துதல் :**

13.1 இப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

13.2 பரீட்சார்த்தி தகைமை பெற்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்ட மொழியில் அல்லது ஏதேனுமொரு அரசகரும மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

13.3 பரீட்சார்த்தி தகைமை பெற்ற பட்டத்தின் பாடங்களை, இரண்டு மொழிகளில் அல்லது அதற்குக் கூடிய மொழிகளில் சித்தியெய்தி இருப்பின், அப் பட்டத்தில் அப் பரீட்சார்த்தி சித்தியெய்திய பாடங்களுள் கூடிய பாடங்களுக்குத் தோற்றிய மொழியில் அல்லது ஏதேனுமொரு அரசகரும மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

13.4 பிரதான பாடம் ஒரு மொழியிலும், மேலதிக பாடம் மற்றொரு மொழியிலும் சித்தியெய்தியுள்ள விசேட பட்டமொன்றைப் பெற்றுள்ள பரீட்சார்த்தியொருவர், பிரதான பாடத்தில் சித்தியெய்திய மொழியில் அல்லது ஏதேனுமொரு அரசகரும மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு :**

(i) மேலே பந்தி 13.2 இலும், 13.3 இலும் காட்டப்பட்ட "தகைமை பெற்ற பட்டம்" எனும் பதம் பந்தி 6.2(i) இல் காட்டப்பட்ட தகைமையாகும்.

(ii) பரீட்சார்த்தி தாம் பரீட்சைக்குத் தோற்றும் ஆங்கில மொழி வினாத்தாள் தவிர, கிரகித்தலும், பொது அறிவும் மற்றும் கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகிய இரண்டு வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடை அளித்தல் வேண்டும்.

(iii) தாம் விண்ணப்பிக்கும் போது குறிப்பிட்ட பரீட்சை மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

*14.* **ஆட்சேர்ப்பு நடைமுறை :**

14.1 ***எழுத்துமூலப் பரீட்சை.***- கீழ்க்காட்டப்பட்ட பாடங்களைக் கொண்ட மூன்று (03) வினாத் தாள்களைக் கொண்டதாக எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் இந்த எல்லாப் பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். பரீட்சை நடாத்தப்படும் பாடங்களும், அந்தந்தப் பாடத்தில் சித்தியெய்துவதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளும் வருமாறு :

| பாட இல. | பாடம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியெய்துவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் | காலம் (மணித்தியாலங்கள்) |
|---|---|---|---|---|
| 01 | கிரகித்தலும், பொது அறிவும் | 100 | 40 | 2 |
| 02 | ஆங்கில மொழி | 100 | 40 | 2 |
| 03 | கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு | 100 | 40 | 1 |

14.2 ***பொதுவான நேர்முகப் பரீட்சை :***

(i) மேலே பந்தி 6 இல் காட்டப்பட்ட ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா? என்பதைப் பரீட்சிப்பதற்காக பொதுவான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுகின்றது. இப் பொதுவான நேர்முகப் பரீட்சைச் சபை திணைக்களத் தலைவரினால் நியமிக்கப்படும்.

(ii) அந்தந்தப் பாடத்திற்காக ஆகக் குறைந்தது நாற்பது (40) அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட பரீட்சார்த்திகளுள், எல்லாப் பாடங்களுக்கும் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத் தொகைக்கு அமைய, ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டோர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதி பெறுகின்றனர். இவ்வாறு தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளுள், எழுத்து மூலப் பரீட்சையில் அவர்கள் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறன் ஒழுங்குவரிசைப்படி, ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கு விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கு எண்ணிக்கையானோர் இல்லாத சந்தர்ப்பத்தில், நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**கவனிக்கவும்** : நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது, நியமனம் வழங்குவதற்கான தகைமையைப் பூர்த்தி செய்திருப்பதாகக் கருதப்பட மாட்டாது.

14.3 வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய, எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் "ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரி தொடக்கம் திறன் ஒழுங்கு வரிசைப்படி" இப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

14.4 **பரீட்சைப் பெறுபேறுகள்**.- இவ் வர்த்தமானி அறிவித்தலில் பந்தி 14.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு, பரீட்சார்த்திகள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பரீட்சைப் பெறுபேற்று அட்டவணை திணைக்களத் தலைவரிடம் பெற்றுக் கொடுக்கப்படும். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றிய எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைப் பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் பகிரங்கப்படுத்தப்படும். எழுத்து மூலப் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட வேண்டும். அச் சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனையொன்றிற்கு உள்ளாவதற்கு பரீட்சார்த்திக்கு நேரிடும்.

15. **எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடத்திட்டம்** :

01 கிரகித்தலும், பொது அறிவும் - காலம் : 02 மணித்தியாலம், புள்ளிகள் : 100

பகுதி 1 - கிரகித்தல்

பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றல், கணித அடிப்படையிலான திறன், கிரகிக்கும் ஆற்றல், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றைச் சோதிப்பதற்கான வினாத்தாள் ஆகும்.

பகுதி 2 - பொது அறிவு

இலங்கையின் அண்மைக்கால சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான தகவல்கள், உலக அரசியல், விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவு, புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகள் முதலானவற்றை நோக்காகக் கொண்ட குறுகிய மற்றும்/அல்லது பல்தேர்வு வினாக்கள் அடங்கிய வினாத்தாள் ஆகும்.

02 ஆங்கில மொழி - காலம் : 02 மணித்தியாலம், புள்ளிகள் : 100

வாசிப்பு மூலம் கிரகித்துக் கொள்ளல், கருத்துகளை வெளியிடல் மற்றும் தொடர்பாடல் திறன் என்பவற்றைச் சோதிப்பதற்கான வினாத்தாள் ஆகும்.

03 கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு - காலம் : 01 மணித்தியாலம், புள்ளிகள் : 100

கணினி தொடர்பான அடிப்படை அறிவு, MS Word, MS Excel போன்ற மென்பொருள்களின் பாவனை, Internet, e-mail பாவனை என்பன தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிப்பதற்கான வினாத்தாள் ஆகும்.

16. இங்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய வர்த்தமானி அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் அல்லது பொருந்தாத சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தல் மேலோங்கி நிற்கும் என்பதுடன், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தலுக்கு அமைய செயற்படுதல் வேண்டும்.

எம்.என். ரணசிங்ஹ,
குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம்,
குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்.

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்,
"சுகுறுபாயா",
ஸ்ரீசுபூத்திபுர வீதி,
பத்தரமுல்லை.
2017, யூலை 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

Open Competitive Examination for Recruitment to Grade II of the Post of Authorized Officer - 2017

1. மொழி மூலம் :

| மொழிமூலம் | இலக்கம் |
|---|---|
| சிங்களம் | 2 |
| தமிழ் | 3 |
| ஆங்கிலம் | 4 |

☐

(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக)

(பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துதல் வேண்டும்)

2. பிரத்தியேக தகவல்கள்

2.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துகளில்) :----.

(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

2.2 முதலெழுத்துகளை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துகளில்) : ----.
(உதாரணம் : GUNAWARDANA H.M.S.K.)

2.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.4 நிரந்தர முகவரி ஆங்கில பெரிய எழுத்துகளில் :----.

2.5 பரீட்சை அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி

(i) ஆங்கில பெரிய எழுத்துகளில் :----.

(ii) சிங்களத்தில்/ தமிழில் :----.

2.6 பால் :
ஆண் - 0
பெண் - 1
☐
(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக) :

2.7 இனம் :

சிங்களவர் - 1
தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3
முஸ்லிம் - 4
பிற - 5
☐
(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக)

2.8 தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

2.9 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

2.10 2017, யூலை 28 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

2.11 தொலைபேசி இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

3. கல்வித் தகைமைகள் :

3.1 பட்டம் தொடர்பான தகவல்கள் :

(i) பட்டம் பெற்ற திகதி :----.
(ii) பல்கலைக்கழகம்/ கல்வி நிறுவகம் :----.
(iii) பதிவிலக்கம் :----.
(iv) உள்வாரியா/ வெளிவாரியா என்பது :----.
(v) பட்டம் :----.
(vi) பாடங்கள்/ பாடத்துறை :----.
(vii) பரீட்சைச் சுட்டெண் :----.
(viii) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :----.

3.2 க.பொ.த. (சா.த.) பரீட்சை :

(i) சித்தியெய்திய வருடம் :----.
(ii) பரீட்சைச் சுட்டெண் :----.
(iii) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :----.
(iv) ஆங்கில மொழிக்குப் பெற்றுக் கொண்ட சித்தி :----.

4. உடற் தகைமைகள் :

4.1 உயரம் :
............ அடி, ............ அங்குலம் அல்லது ..................... சென்றி மீற்றர்

4.2 மார்புச் சுற்றளவு (பெண் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது) :
............ அடி, ............ அங்குலம் அல்லது ..................... சென்றி மீற்றர்

5. 5.1 ஏதேனும் குற்றவியல் குற்றத்திற்கு நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? :----. (ஆம்/இல்லை)

5.2 "ஆம்" எனில் அது தொடர்பான விபரங்களைத் தருக. :----.

6. 6.1 நீங்கள் ஏற்கனவே அரசாங்க சேவையில் பதவியொன்றை வகிக்கின்றீர்களா ? :----. (ஆம்/ இல்லை)

6.2 "ஆம்" எனில் அது தொடர்பான விபரங்களைத் தருக :----.

7. நீங்கள் அரசாங்க சேவையில் பதவியொன்றை வகித்து வந்த வேளை பதவிநீக்கப்பட்ட/ பதவி விலகிய ஒருவரா என்பது :----.

8. பரீட்சைக் கட்டணம் :

(i) செலுத்தப்பட்ட தபால்/ உப தபால் அலுவலகம் :----.
(ii) செலுத்திய தொகை :----.
(iii) செலுத்திய திகதி :----.
(iv) பற்றுச்சீட்டு இல. :----.

| பற்றுச்சீட்டின் ஓர் ஓரமாக வேறாகாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்) |
|---|

9. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இங்கு என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானதும் சரியானதுமென உறுதியுரைக்கின்றேன். அத்துடன் பரீட்சை சட்ட திட்டங்களுக்கு ஏற்ப செயற்படுவதற்கும், இப் பரீட்சை தொடர்பான ஏற்பாடுகளுக்கும், நிபந்தனைகளுக்கும் ஏற்ப, நான் இப் பதவிக்கு தகுதியற்றவன் எனத் தெரிய வரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எனது அபேட்சகத்துவத்தை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கும் இணங்குகின்றேன். மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என்பதையும் உறுதியுரைக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் (வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 8.4 இற்கு அமைவாக இருத்தல் வேண்டும்) :

இவ் விண்ணப்பத்தை முன்வைக்கும் ..................................................................................................... (முழுப் பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் என்பதையும், இவர் என் முன்னிலையில் 2017, ........... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதையும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.
அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(இறப்பர் முத்திரையை இடவும்)

7-458/ 1

## உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்

### குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் வெளிக்கள/ அலுவலக முறைப்பட்ட - தொகுதி 2 சேவை வகுதியைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு, கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இவ் அறிவித்தலில் "திணைக்களத் தலைவர்" எனும் பதம் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் எனப் பொருள்படும். இந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், வேறு விதத்தில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டில்லாத சந்தர்ப்பங்களில் "பதவி" எனும் பதம் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II எனப் பொருள்படும்.

2. இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2017, யூலை 28 ஆகும்.

2.1 ***எழுத்து மூலப் பரீட்சை.***- இப்பரீட்சை கீழ்க்காட்டப்பட்டவாறு மூன்று (03) வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

(1) கிரகித்தலும், பொது அறிவும்.
(2) ஆங்கில மொழி.
(3) கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு.

2.2 ***பரீட்சைத் திகதி.***- இப்பரீட்சை 2017, ஓகத்து மாதம் 27 ஆந் திகதி கொழும்பில் நடைபெறும். இப் பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் திணைக்களத் தலைவருக்கு உண்டு.

2.3 ***நேர்முகப் பரீட்சை :***

(i) நிலவும் வெற்றிடங்களுள் 10% வீதம் மட்டும் பெண் விண்ணப்பதாரிகளுக்காக ஒதுக்கப்படும்.

(ii) திணைக்களத் தலைவரினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையினால், எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றி, ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஆகக் குறைந்தது 40% வீத புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளுள் இருந்து, நிலவும் வெற்றிடங்களைப் போன்று இரு மடங்காக இருக்குமாறு, மேலே (i) இல் காட்டப்பட்ட அடிப்படைக்கு அமைவாக "ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள்" நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். (இந் நேர்முகப் பரீட்சை தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக மட்டுமே நடாத்தப்படும்).

(iii) நேர்முகப் பரீட்சையின் போது கீழே பந்தி 6.3 இன் கீழ் காட்டப்பட்டுள்ள உடல், உளத் தகைமைகளும் பரீட்சிக்கப்படும்.

3. இப்பதவிக்கு நியமிக்கப்படுகின்ற பதவிகளின் எண்ணிக்கை இருபத்தொன்று (21) ஆகும். இறுதியாக நிலவும் வெற்றிடத்திற்கு அல்லது வெற்றிடங்களுக்கு, சமமான புள்ளிகளைப் பெற்று, நிலவும் வெற்றிடங்களையும் தாண்டி விண்ணப்பதாரிகள் இருக்கின்ற சந்தர்ப்பத்தில், அவ் வெற்றிடத்தை/ வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் திணைக்களத் தலைவரினால் இறுதி முடிவு எடுக்கப்படும் என்பதுடன், இவ் ஆட்சேர்ப்புகளில் நியமனம் அமுலுக்கு வரும் திகதியும் திணைக்களத் தலைவரினாலேயே தீர்மானிக்கப்படும்.

4. **சேவை நிபந்தனைகள் :**

4.1 அரசாங்க சேவை நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக் கோவை ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், 2009.02.20 ஆந் திகதிய 1589/ 30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழு நடவடிக்கைமுறை விதிகளுக்கும்,

2013.12.20 ஆம் திகதியுடையதாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் வெளிக்கள/ அலுவலக முறைப்பட்ட - தொகுதி 2 சேவை வகுதியைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையிலுள்ள நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும், அவ் ஆட்சேர்ப்பு நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு, தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு நியமிக்கப்படுவர்.

4.2 இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

4.3 இந் நியமனம் ஒரு (01) வருட தகுதிகாண் காலத்திற்குக் கட்டுப்பட்டதாகும். அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு நியமிக்கப்பட்டு மூன்று (03) வருட காலப்பகுதிக்குள், ஆட்சேர்ப்பு நடைமுறையில் காட்டப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

4.4 01/2014 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையினதும், அதனுடன் இணைந்த சுற்றறிக்கைகளினதும் பிரகாரம், சேவையில் இணைந்து 05 வருட காலப்பகுதிக்குள் உரிய மட்டத்திற்குரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5. **இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய 3/ 2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு அமைய இப் பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :

ரூபா 34,605 - 10 x 660 - 11 x 755 - 15x930 - ரூபா 63,460 (MN-5/ 2016). மேற் கூறிய அச்சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, அதில் அட்டவணை II இற்கு அமையவே சம்பளம் செலுத்தப்படும். இதற்கு மேலதிகமாக அரச உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படுகின்ற பிற கொடுப்பனவுகளும் இவ் உத்தியோகத்தர்களுக்கும் உரித்தாகும்.

6. **தகைமைகள்** :

6.1 (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
(iii) தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், இப்பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.2 ***கல்வித் தகைமையும் அனுபவமும் :***

(i) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன், ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு (01) பாடத்தில் (சாதாரண பொதுப் பரீட்சை நீங்கலாக) சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய கடைசித் திகதிக்கு அரச சேவையில்/ மாகாண அரச சேவையில், நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமான MN-1/2016 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத்திட்டத்தையுடைய பதவியொன்றில் பத்து (10) வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ''பட்டம் அளிப்பதற்கான நிறுவனமொன்றாக'' அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் அளிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய இறுதித் திகதிக்கு அரச சேவையில்/ மாகாண அரச சேவையில், நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமான MN-1/2016 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத் திட்டத்தையுடைய பதவியொன்றில் ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு** :

(i) பட்டம் பெற்ற திகதியும், க.பொ.த. (சா.த.) பரீட்சை/ க.பொ.த. (உ.த.) பரீட்சைகளில் மேற்சொன்னவாறு சித்தியடைந்திருக்க வேண்டிய திகதியும், தகைமைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டிய இறுதித் திகதியான 2017 யூலை 28 ஆந் திகதி அல்லது அதற்கு முந்திய திகதியாக இருத்தல் வேண்டும்.

(ii) மேற்சொன்ன சேவைக் காலத்தைக் கணிப்பிடும் போது, அரச சேவையில் மற்றும்/ அல்லது மாகாண அரச சேவையில் உரியதும், தொடர்ச்சியானதுமான சேவைக் காலம் ஏற்றுக் கொள்ளப்படும்.

6.3 ***உடற் தகைமைகள் :***

(i) விண்ணப்பதாரிகளின் உயரம் ஆகக் குறைந்தது 5 அடி 4 அங்குலம் (162.5 செ.மீ.) ஆகவும், மார்புச் சுற்றளவு 32 அங்குலம் (81.25 செ.மீ.) ஆகவும் இருத்தல் வேண்டும்.

(ii) பெண் விண்ணப்பதாரிகளின் உயரம் ஆகக் குறைந்தது 5 அடி 2 அங்குலம் (156 செ.மீ.) ஆக இருத்தல் வேண்டும்.

6.4 ***வயதெல்லை.***- ஏற்கனவே தற்போது அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு வயதெல்லை கருத்திற்கொள்ளப்பட மாட்டாதென்பதோடு அவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

7. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் ரூபா அறுநூறு (ரூ. 600) ஆகும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 எனும் வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்கும் வகையில், தீவின் எந்தவொரு தபால்/ உபதபால் அலுவலகத்திலும் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தலாம். இப் பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக வேறு எந்தவொரு கட்டணமும் அறவிடப்பட மாட்டாது. பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூண்டில் ஒட்டுதல் வேண்டும். எக் காரணம் கொண்டும் இப் பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது பிறிதொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது. பரீட்சைக் கட்டணம் சார்பில் காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. (பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்).

8. **விண்ணப்பிக்கும் முறை** :

8.1 இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக, 8 1/2"x12" அளவிலான கடதாசியின் (A4) இரு பக்கங்களையும் பாவித்து, இல. 1.0 தொடக்கம் 2.8 வரை முதலாம் பக்கத்திலும், இல. 2.9 தொடக்கம் 5.2 வரை இரண்டாம் பக்கத்திலும், எஞ்சிய பகுதிகள் மூன்றாம் பக்கத்திலும் இருக்குமாறு தமது விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பப்படிவங்களை தமது கையெழுத்தில் அல்லது கணினியில்/ தட்டச்சு இயந்திரத்தில் தட்டச்சு செய்து தயாரித்துக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவம் பரீட்சார்த்தியின் கையெழுத்தினால் நிரப்பப்பட்டிருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும், பூரணமற்ற விதத்தில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் எந்தவொரு அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதா? என்பதை பரீட்சித்துப் பார்ப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்).

8.2 விண்ணப்பங்கள் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8.3 சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2017, யூலை 28 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு,

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த.பெ. இல. 1503,
கொழும்பு.

என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படுகின்ற கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017" என தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களைத் தயாரிக்கும்போது, இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய, அதன் தலைப்பை, சிங்கள மொழிமூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழிமூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுவது கட்டாயமாகும்.

8.4 எழுத்துமூலப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரி வகித்த பதவி, சேவை நிலையம் ஆகியவற்றில் பின்னர் ஏற்படக் கூடிய மாற்றங்கள் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

8.5 விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பகிரங்க நொத்தாரிசு/ முப்படையைச் சேர்ந்த அதிகார ஆணை பெற்ற உத்தியோகத்தர்/ பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூ. 2,40,360/- (6/2006 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் மாதாந்த சம்பளம் ரூ. 41,580/-) அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த திரட்டிய அடிப்படைச் சம்பளத்தைப் பெறும் அரசாங்கத்தில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஆகியோருள் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

8.6 எல்லா விதத்திலும் பரிபூரணமாக இல்லாத விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் காணாமல் போகும் அல்லது பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

8.7 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில், எல்லா விதத்திலும் பரிபூரணமான விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அதனை அறிவிக்கும் வகையில், பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகையில் அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு இரண்டு (02) அல்லது மூன்று (03) நாட்கள் கடந்ததன் பின்பும் தமக்குரிய அனுமதி அட்டைகள் கிடைக்கா விட்டால், அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அதனை அறிவித்தல் வேண்டும். இவ்வாறு அறிவிக்கும்போது, விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இல., முகவரி ஆகிய விபரங்களை தெளிவாகவும் , சரியாகவும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பிடத்தைக் கொண்டவராக இருப்பின், தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு வசதியாக, மேற்சொன்ன விபரங்களுடன் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு, தமது கோரிக்கைக் கடிதத்தை குறித்த பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்தினூடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதன் மூலம் விசாரிப்பது சாலச் சிறந்ததாக அமையும். மேலும், பரீட்சைகள் திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற ஏதேனும் விபரமொன்றை உறுதிப்படுத்தும் வகையில், விண்ணப்பதாரி ஏற்கனவே தம் வசம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதி, விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு ஆகியவற்றைத் தயார் நிலையில் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

*9.* **பரீட்சைக்குத் தோற்றுதல்** :

*9.1 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு மட்டும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும். பரீட்சைத் தினத்தன்று பரீட்சை அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.*

*9.2 பரீட்சார்த்திகள், தமக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையை, குறித்த பரீட்சை மண்டபத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் முதலாவது நாளிலேயே கையளித்தல் வேண்டும். பொதுவாக பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும், அறிவுறுத்தல்களும் இவ் வர்த்தமானியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச் சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்குக் கட்டுப்படுவதற்கு பரீட்சார்த்திகளுக்கு நேரிடும்.*

**குறிப்பு** : *பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையொன்றை விநியோகிப்பதானது, அப் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கும், பதவியொன்றை வகிப்பதற்கும் தேவையான எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதாக கருதப்படமாட்டாது.*

*10.* **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்** :

*10.1 பரீட்சார்த்தியானவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும்.*

*10.2 இதற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதேனும் ஒன்று மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.*

(i) *ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;*
(ii) *செல்லுபடியான கடவுச்சீட்டு.*

*11.* **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- *விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தும்போது மிகக் கவனமாக கவனம் செலுத்தி மிகச் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கு அமைய எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத் தெரியவரும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ ஆகிய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப் பரீட்சார்த்தியின் அபேட்சகத்துவம் இரத்துச் செய்யப்படலாம்.*

*12. இவ் அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பில் திணைக்களத் தலைவரினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.*

*13.* **பரீட்சையை நடாத்துதல்** :

*13.1 இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும்.*

*13.2 பரீட்சார்த்தி ஆகக் கூடிய கல்வித் தகைமையைப் பெற்றுக் கொண்ட மொழியில் அல்லது ஏதேனுமொரு அரசகரும மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.*

*13.3 பரீட்சார்த்தி தகைமை பெற்ற பட்டத்தின் பாடங்களை, இரண்டு மொழிகளில் அல்லது அதற்குக் கூடிய மொழிகளில் சித்தியெய்தி இருப்பின், அப் பட்டத்தில் அப் பரீட்சார்த்தி சித்தியெய்திய பாடங்களுள் கூடிய பாடங்களுக்குத் தோற்றிய மொழியில் அல்லது ஏதேனுமொரு அரசகரும மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.*

*13.4 பிரதான பாடம் ஒரு மொழியிலும், மேலதிக பாடம் மற்றொரு மொழியிலும் சித்தியெய்தியுள்ள விசேட பட்டமொன்றைப் பெற்றுள்ள பரீட்சார்த்தியொருவர், பிரதான பாடத்தில் சித்தியெய்திய மொழியில் அல்லது ஏதேனுமொரு அரசகரும மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.*

**குறிப்பு :**

(i) மேலே பந்தி 13.3 இல் காட்டப்பட்ட "தகைமை பெற்ற பட்டம்" எனும் பதம் பந்தி 6.2(ii) இல் காட்டப்பட்ட தகைமையாகும்.

(ii) பரீட்சார்த்தி தாம் பரீட்சைக்குத் தோற்றும் ஆங்கில மொழி வினாத்தாள் தவிர, கிரகித்தலும், பொது அறிவும் மற்றும் கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகிய இரண்டு வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடை அளித்தல் வேண்டும்.

(iii) தாம் விண்ணப்பிக்கும்போது குறிப்பிட்ட பரீட்சை மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

14. **ஆட்சேர்ப்பு நடைமுறை :**

14.1 ***எழுத்துமூலப் பரீட்சை.***- கீழ்க்காட்டப்பட்ட பாடங்களைக் கொண்ட மூன்று (03) வினாத் தாள்களைக் கொண்டதாக எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் இந்த எல்லாப் பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். பரீட்சை நடாத்தப்படும் பாடங்களும், அந்தந்தப் பாடத்தில் சித்தியெய்துவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளும் வருமாறு :

| பாட இல. | பாடம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியெய்துவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் | காலம் (மணித்தியாலங்கள்) |
|---|---|---|---|---|
| 01 | கிரகித்தலும், பொது அறிவும் | 100 | 40 | 2 |
| 02 | ஆங்கில மொழி | 100 | 40 | 2 |
| 03 | கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு | 100 | 40 | 1 |

14.2 ***பொதுவான நேர்முகப் பரீட்சை :***

(i) மேலே பந்தி 6 இல் காட்டப்பட்ட ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா? என்பதைப் பரீட்சிப்பதற்காக பொதுவான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுகின்றது. இப் பொதுவான நேர்முகப் பரீட்சைச் சபை திணைக்களத் தலைவரினால் நியமிக்கப்படும்.

(ii) அந்தந்தப் பாடத்திற்காக ஆகக் குறைந்தது நாற்பது (40) அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட பரீட்சார்த்திகளுள், எல்லாப் பாடங்களுக்கும் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத் தொகைக்கு அமைய, ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டோர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதி பெறுகின்றனர். இவ்வாறு தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளுள், எழுத்து மூலப் பரீட்சையில் அவர்கள் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறன் ஒழுங்குவரிசைப்படி, ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கு விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கு எண்ணிக்கையானோர் இல்லாத சந்தர்ப்பத்தில், நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**கவனிக்கவும்** : நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது, நியமனம் வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாகக் கருதப்பட மாட்டாது.

14.3 வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய, எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் "ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரி தொடக்கம் திறன் ஒழுங்கு வரிசைப்படி" இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

14.4 **பரீட்சைப் பெறுபேறுகள்**.- இவ் வர்த்தமானி அறிவித்தலில் பந்தி 14.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு, பரீட்சார்த்திகள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில்

தயாரிக்கப்பட்ட பரீட்சைப் பெறுபேற்று அட்டவணை திணைக்களத் தலைவரிடம் பெற்றுக் கொடுக்கப்படும். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றிய எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைப் பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் பகிரங்கப்படுத்தப்படும். எழுத்து மூலப் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுகின்றனர். அச் சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனையொன்றிற்கு உள்ளாவதற்கு பரீட்சார்த்திக்கு நேரிடும்.

15. **எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடத்திட்டம்** :

01 கிரகித்தலும், பொது அறிவும் - காலம் : 02 மணித்தியாலம், புள்ளிகள் : 100

பகுதி 1 - கிரகித்தல்

கருத்து விளக்கம், சுருக்கம் எழுதுதல், பந்தியொன்றை வாசித்து விளங்கிக்கொள்ளல், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றைச் சோதிப்பதற்கான வினாத்தாள் ஆகும்.

பகுதி 2 - பொது அறிவு

இலங்கையின் அண்மைக்கால சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான தகவல்கள், உலக அரசியல், விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவு, புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகள் முதலானவற்றை நோக்காகக் கொண்ட குறுகிய மற்றும்/அல்லது பல்தேர்வு வினாக்கள் அடங்கிய வினாத்தாள் ஆகும்.

02 ஆங்கில மொழி - காலம் : 02 மணித்தியாலம், புள்ளிகள் : 100

வாசிப்பு மூலம் கிரகித்துக் கொள்ளல், கருத்துகளை வெளியிடல் மற்றும் தொடர்பாடல் திறன் என்பவற்றைச் சோதிப்பதற்கான வினாத்தாள் ஆகும்.

03 கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு - காலம் : 01 மணித்தியாலம், புள்ளிகள் : 100

கணினி தொடர்பான அடிப்படை அறிவு, MS Word, MS Excel போன்ற மென்பொருள்களின் பாவனை, Internet, e-mail பாவனை என்பன தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிப்பதற்கான வினாத்தாள் ஆகும்.

16. இங்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய வர்த்தமானி அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் அல்லது பொருந்தாத சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தல் மேலோங்கி நிற்கும் என்பதுடன், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தலுக்கு அமைய செயற்படுதல் வேண்டும்.

எம்.என். ரணசிங்ஹ,
குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம்,
குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்.

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்,
"சுகுறுபாயா",
ஸ்ரீசுபூத்திபுர வீதி,
பத்தரமுல்லை.
2017, யூலை 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017**

Limited Competitive Examination for Recruitment to Grade II of the Post of Authorized Officer - 2017

1. மொழி மூலம் :

| மொழிமூலம் | இலக்கம் |
|---|---|
| சிங்களம் | 2 |
| தமிழ் | 3 |
| ஆங்கிலம் | 4 |

(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக)

(பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துதல் வேண்டும்)

2. பிரத்தியேக தகவல்கள்

2.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துகளில்) :----.

(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

2.2 முதலெழுத்துகளை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துகளில்) : ----.

(உதாரணம் : GUNAWARDANA H.M.S.K.)

2.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.4 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துகளில்) :----.

2.5 பரீட்சை அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி

(i) ஆங்கில பெரிய எழுத்துகளில் :----.

(ii) சிங்களத்தில்/ தமிழில் :----.

2.6 பால் :
ஆண் - 0
பெண் - 1

(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக) :

2.7 இனம் :

சிங்களவர் - 1
தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3
முஸ்லிம் - 4
பிற - 5

(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக)

2.8 தேசிய அடையாள அட்டை இல. : | | | | | | | | | | |

2.9 பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

2.10 2017, யூலை 28 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

2.11 தொலைபேசி இல. : | | | | | | | | | | |

3.

3.1 நீங்கள் 2017, யூலை 28 ஆந் திகதியில் இருக்கும் சேவையில் இணைவதற்கு தகைமைபெற்ற பரீட்சையில் சித்தியடைந்து/ நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த மொழிமூலத்தைக் குறிப்பிடுக :----.

3.2 நீங்கள் இவ் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6 இல் காட்டப்பட்டுள்ள எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளீரா? :----.

3.3 நீங்கள் அதில் காட்டப்பட்டுள்ள எப் பிரிவின் கீழ் தகுதி பெறுகின்றீர்கள்? :----.

(பந்தி 6.2 (i) இன் கீழ்/பந்தி 6.2 (ii) இன் கீழ்)

4. கல்வித் தகைமைகள் :

4.1 பட்டம் தொடர்பான தகவல்கள் :

(i) பட்டம் பெற்ற திகதி :----.
(ii) பல்கலைக்கழகம்/ கல்வி நிறுவகம் :----.
(iii) பதிவிலக்கம் :----.
(iv) உள்வாரியா/ வெளிவாரியா என்பது :----.
(v) பட்டம் :----.
(vi) பாடங்கள்/ பாடத்துறை :----.
(vii) பரீட்சைச் சுட்டெண் :----.
(viii) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :----.

4.2 க.பொ.த. (உ.த.) பரீட்சை :

(i) சித்தியெய்திய வருடம் :----.
(ii) பரீட்சைச் சுட்டெண் :----.
(iii) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :----.
(iv) பெற்றுக்கொண்ட சித்திகள் :

1. ...................................... 2. .........................................
3. ...................................... 4. .........................................

4.3 க.பொ.த. (சா.த.) பரீட்சை :

(i) சித்தியெய்திய வருடம் :----.
(ii) பரீட்சைச் சுட்டெண் :----.

(iii) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :----.

(iv) பெற்றுக்கொண்ட சித்திகள் :

1. ............................................... 2. ...............................................
3. ............................................... 4. ...............................................
5. ............................................... 6. ...............................................
7. ............................................... 8. ...............................................
9. ............................................... 10. ...............................................

5. உடற் தகைமைகள் :

5.1 உயரம் :
........... அடி, ............ அங்குலம் அல்லது ..................... சென்றி மீற்றர்

5.2 மார்புச் சுற்றளவு (பெண் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது) :
........... அடி, ............ அங்குலம் அல்லது ..................... சென்றி மீற்றர்

6. சேவை அனுபவம் :

6.1 தற்போது வகிக்கும் பதவி :----.

6.2 வகுப்பு/தரம் :----.

6.3 பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

6.4 பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.

6.5 சம்பளக் குறியீட்டு இலக்கமும், சம்பள அளவுத் திட்டமும் :----.

6.6 இப் பதவி மத்திய அரசுக்கு உரியதா? மாகாண அரசுக்கு உரியதா? என்பது :----.

6.7 விண்ணப்பிப்பதற்காக தகுதி பெறுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட தொடர் சேவைக் காலங்கள் ஏற்புடையதாக இருப்பின் அச் சேவைக் காலங்கள் தொடர்பான விபரங்கள் :

| | சேவை/பதவி/தரம் | சம்பளக் குறியீட்டு இல. | நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| (i) | ........................................... | ........................................... | ........................................... |
| (ii) | ........................................... | ........................................... | ........................................... |
| (iii) | ........................................... | ........................................... | ........................................... |
| (iv) | ........................................... | ........................................... | ........................................... |

6.8 இவ் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6.2 இல் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் 2017 யூலை 28 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றில் அல்லது பதவிகளில் சேவையில் ஈடுபட்டிருந்த மொத்த சேவைக் காலம் :

7. பரீட்சைக் கட்டணம் :

(i) செலுத்தப்பட்ட தபால்/ உப தபால் அலுவலகம் :----.
(ii) செலுத்திய தொகை :----.
(iii) செலுத்திய திகதி :----.
(iv) பற்றுச்சீட்டு இல. :----.

| |
|---|
| பற்றுச்சீட்டின் ஓர் ஓரமாக வேறாகாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்) |

8. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதிக்கு, இவ் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6 இன் பிரகாரம் பூர்த்தி செய்திருக்க வேண்டிய எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளேன் எனவும், எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரித்தல் நீங்கலாக) உட்பட்டில்லை என்பதையும் உறுதியுரைக்கின்றேன். அத்துடன் பரீட்சையை நடாத்துவது தொடர்பிலும், பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பிலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கு நான் கட்டுப்படுகின்றேன் என்பதையும் உறுதியுரைக்கின்றேன்.

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா சட்ட திட்டங்களுக்கும் ஏற்ப, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் தகுதியுடையேன் எனவும், இங்கு என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானதும் சரியானதுமெனவும் உறுதியுரைக்கின்றேன். அத்துடன் பரீட்சை சட்ட திட்டங்களுக்கு ஏற்ப செயற்படுவதற்கும், இப் பரீட்சை தொடர்பான ஏற்பாடுகளுக்கும், நிபந்தனைகளுக்கும் ஏற்ப, நான் இப் பதவிக்கு தகுதியற்றவன் எனத் தெரிய வரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எனது அபேட்சகத்துவத்தை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கும் இணங்குகின்றேன். மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என்பதையும் உறுதியுரைக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. திணைக்களத் தலைவரின் உறுதியுரை (விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவைக்கு அமைய) :

இவ் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................................................ ......................................................................................................................... (முழுப் பெயர்) அவர்கள், மத்திய அரசின் கீழுள்ள/ ................................................ மாகாண சபையின் கீழுள்ள .................................................... ............................... அமைச்சில்/ திணைக்களத்தில் ............................................. பதவியில் பணியாற்றுகின்றார் என்பதையும், வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6 இற்கு அமைய தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய கடைசித் திகதிக்கு ............. (ஐந்து/ பத்து) வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதையும், எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரித்தல் தவிர) உட்படுத்தப்பட்டில்லை என்பதையும், வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைய, இவர் எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பூர்த்தி செய்திருக்க வேண்டிய எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதையும், இவர் என் முன்னிலையில் 2017 ........... ஆம் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதையும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(இறப்பர் முத்திரையை இடவும்)
திகதி :----.

7-458/ 2

---

திருத்தம்

**இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 3 ஆம் வகுப்பின் III ஆந் தரம், 3 ஆம் வகுப்பின் II ஆந் தரம் 3 ஆம் வகுப்பின் I ஆந் தரம் 2 ஆம் வகுப்பின் II ஆந் தரம் மற்றும் 2 ஆம் வகுப்பின் I ஆந் தரத்தினைக் கொண்ட அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2017**

2017.06.16 ஆந் திகதிய 2024 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் 6-170 ஆம் இலக்க அறிவித்தலில் வெளியிடப்பட்ட குறித்த வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிமூல அறிவித்தல் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்படுகின்றது :-

(i) பரீட்சை அறிவித்தலின் 5.0 இன்கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2017, யூலை 10 ஆந் திகதி நள்ளிரவு 12.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

(ii) இத்திருத்தத்தின் மூலம் பரீட்சை நடைபெறும் திகதிகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்பட மாட்டாதென்பதுடன் பரீட்சை அறிவித்தலின் ஏனைய செயற்பாடுகள் மாற்றமின்றி வலுவிலிருக்கும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

7-517

---

திருத்தம்

**இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் III ஆந் தரம், 1 ஆம் வகுப்பின் II ஆந் தரம் மற்றும் 1 ஆம் வகுப்பின் I ஆந் தரத்தினைக் கொண்ட அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2017**

2017.06.16 ஆந் திகதிய 2024 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் 6-169 ஆம் இலக்க அறிவித்தலில் வெளியிடப்பட்ட குறித்த வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிமூல அறிவித்தல் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்படுகின்றது :-

(i) பரீட்சை அறிவித்தலின் 5.0 இன்கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2017, யூலை 10 ஆந் திகதி நள்ளிரவு 12.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

(ii) இத்திருத்தத்தின் மூலம் பரீட்சை நடைபெறும் திகதிகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்பட மாட்டாதென்பதுடன் பரீட்சை அறிவித்தலின் ஏனைய செயற்பாடுகள் மாற்றமின்றி வலுவிலிருக்கும்.

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

7-518

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**

**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**

**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 13700 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 13700 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,30000 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,60000 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | ரூபா ச. விலை ரூபா ச. | ரூபா ச. தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

*அட்டவணை–2017*

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 07.07.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.06.2017 |
| | | வெள்ளி | 14.07.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.06.2017 |
| | | வெள்ளி | 21.07.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.07.2017 |
| | | வெள்ளி | 28.07.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.07.2017 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 04.08.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.07.2017 |
| | | வெள்ளி | 11.08.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.07.2017 |
| | | வெள்ளி | 18.08.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.08.2017 |
| | | வெள்ளி | 25.08.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.08.2017 |
| | | வியாழன் | 31.08.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.08.2017 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 08.09.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.08.2017 |
| | | வெள்ளி | 15.09.2017 | .. | நண்பகல் 12 | வியாழன் | 31.08.2017 |
| | | வெள்ளி | 22.09.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.09.2017 |
| | | வெள்ளி | 29.09.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.09.2017 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.